08.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அதிசயம்...ஆச்சரியம்...இமயம்: நடக்கும் மீன், தும்மும் குரங்கு : 211 புதிய உயிரினங்கள் கண்டுபிடிப்பு




இமயமலை அதிசயம் நிறைந்த உலகம். இங்கு பாம்பு தலை கொண்ட நடக்கும் மீன்கள், தும்மும் குரங்கு, சத்தமாக பாடும் பறவை, ஊதா நிற கண்களை உடைய தவளை, விசித்திரமான வாழை, அற்புதமான பூக்கள் என 211 வகையிலான புதிய உயிரினங்கள் கண்டறியப்பட்டுள்ளன. கிழக்கு இமயமலையில் சமீபத்தில் ஆய்வுகள் நடந்தன. இப்பகுதி 'ஆசியாவின் அற்புதம்' என அழைக்கப்படுகிறது. இது, அரிய உயிரினங்களின் இடமாக திகழ்கிறது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் (அருணாசலப்பிரதேசம், சிக்கிம், மேற்கு வங்காளம்), பூடான், நேபாளம், மியான்மர் மற்றும் தெற்கு திபெத் ஆகியவை இங்கு உள்ளன.

கடந்த 2009 முதல்- 2014 வரை ஆராய்ச்சி செய்த போது புதிய வகை உயிரினங்கள் கண்டறியப்பட்டுள்ளன என இயற்கைக்கான உலகளாவிய நிதியம் (டபிள்யூ.டபிள்யூ.எப்.,) தெரிவித்துள்ளது. ஏற்கனவே 1998 முதல் 2008 வரையிலான காலத்தில் 354 வகையிலான உயிரினங்கள் கண்டறிப்பட்டன.

### பாம்பு தலை மீன்கள் :

சன்னா ஆன்ட்ரா என்ற இவ்வகை மீன்கள் நிலத்திலும் வாழக்கூடியவை. பாம்பு தலை கொண்ட இந்த மீன்கள் தொடர்ந்து 4 நாட்கள் நிலத்தில் வாழும். மற்ற விலங்குகளிடமிருந்து பதுங்கி வாழும். இவை மேற்கு வங்க பகுதியில் காணப்படுகின்றன.

### வித்தியாசமான வாழை :

இந்த புதிய வகை வாழை மரத்தின் பூ, சாதாரண வழைப் பூவில் வித்தியாசமுடையது. இதற்கு பிரபல 'வாழைப்பழ' விஞ்ஞானி மர்க்கு ஹாக்கினன் என்பவரின் பெயர் சூட்டடப்பட்டுள்ளது.

### மழையை கணிக்கும் குரங்கு :

"ஸ்னப்பி' என அழைக்கப்படும் இந்த குரங்கு தனது சுவாசத்தின் மூலம் மழை வருவதை முன் கூட்டியே கணித்து விடும். மழையில் நனைந்தால் மனிதர்களை போல தும்மும். இதை தவிர்ப்பதற்காக மழைக்காலங்களில் தனது தலையை முழங்காலோடு சேர்த்து வைத்துக்கொள்ளும்.

இது மியான்மர் பகுதியில் வாழ்கின்றன. ஊதா நிற கண்களுடைய

தவளை

சத்தமாக பாடும் பறவை

பெண்கள் அணியும் தங்க நகைகள் போன்ற பாம்பு

*211 புதிய உயிரினங்கள் எவை

*133 தாவர வகைகள்

*26 மீன் வகைகள்

*39 முதுகெலும்பில்லாத உயிரினங்கள்

*10 நீர் மற்றும் நிலத்தில் வாழும் உயிரினங்கள்

*1 ஊர்வன

*1 பறவை

*1 பாலுட்டி

**எத்தனை உயிரினங்கள்:**

* 10,000 தாவர வகைகள்

* 977 பறவையினங்கள் வாழ்கின்றன.

* 300 புலி, சிறுத்தை உள்ளிட்ட பாலூட்டிகள்

* 269 நன்னீரில் வாழும் மீன்வகைகள்

* 176 ஊர்ந்து செல்பவை

* 105 நீர் நிலத்தில் வாழ்பவை

**100:** சுமார் 100 கோடி மக்கள் பனிபடர்ந்த இமயமலையை குடிநீருக்காக நம்பி உள்ளனர்.

**மரம் வளர்ப்பு கட்டாயம்: கவர்னர் விருப்பம்**

பெங்களூரு: நிலம் தரும்போது, குறிப்பிட்ட பகுதியில் மரம் வளர்ப்பதை கட்டாயமாக்க வேண்டும்," என, கவர்னர் வஜுபாய் வாலா தெரிவித்தார்.வனத்துறை சார்பில், பெங்களூரில் நடந்த, 'வன விலங்குகள் பாதுகாப்பு' நிகழ்ச்சியை, கவர்னர் வஜுபாய் வாலா துவக்கி வைத்தார்.அவர் பேசியதாவது:பெரிய தொழிலதிபர்களுக்கு நிலம் தரப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட இடத்தில் மரம் வளர்க்க

வேண்டும் என்பதை கட்டாயமாக்க வேண்டும். இதனால் வன சொத்துகள் பெருகும்.வனத்தை பாதுகாக்கும் கடமையை உணர்ந்து, மரம், செடிகளை மக்கள் பாதுகாக்க வேண்டும். சட்டவிரோதமாக மரத்தை வெட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வன மற்றும் வன விலங்குகள் பாதுகாப்பு பற்றியும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். மரம் வளர்ப்பதில் உள்ளாட்சி அமைப்புகள், பொதுமக்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.குஜராத் மாநிலம் ராஜ்கோட் மேயராக நான் இருந்தபோது, மரம் வளர்ப்போருக்கு ரொக்க பணம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினேன்.இவ்வாறு அவர் கூறினார்.வனத்துறை அமைச்சர் ரமாநாத்ராய் பேசுகையில், "வனங்களை பாதுகாப்பதில் மக்களும் அரசுடன் கைகோர்க்க வேண்டும்," என்றார்.

### மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

மதுரை,:மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் சில நாட்களாக மழை பெய்வதால் அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.மதுரையில் அதிகபட்சமாக புலிப்பட்டியில் நேற்று முன் தினம் 35.4 மி.மீ., மழை பதிவானது.மழையளவு(மி.மீ.,) வருமாறு: பெரியாறு அணை 4.4, தேக்கடி 2.6 உத்தமபாளையம் 3.8, மருதாநதி 4.2 பேரணை 13.4, குப்பணம்பட்டி7.4, ஆண்டிப்பட்டி 10 மதுரை 7, சாத்தையாறு அணை 23 மேட்டுப்பட்டி 6.2, கள்ளந்திரி 18, சிட்டம்பட்டி 5.2 மேலூர்24, தனியாமங்கலம்31, இடையப்பட்டி 7.8 கொடைக்கானல் 23.2 என பதிவானது.

அணைகளுக்கு நீர் வரத்து: பெரியாறு அணை நீர்மட்டம் 116.80, நீர்வரத்து விநாடிக்கு 713 கன அடி. வெளியேற்றம் 505 கன அடி. வைகை அணை நீர் மட்டம் 49.02 நீர் வரத்து 440 கன அடி. வெளியேற்றம் 960 கன அடி. மஞ்சளாறு அணைக்கு நீர் வரத்து 118 கன அடி. வெளியேற்றம் இல்லை.

மருதாநதிக்கு நீர் வரத்து 101 கன அடி. வெளியேற்றம் 90 கன அடி.

சோத்துப்பாறை அணைக்கு நீர் வரத்து 03 கன அடி. வெளியேற்றம் 03கன அடி.

**மன்னார் வளைகுடா கடல்வள பாதுகாப்பு கன்னியாகுமரி வரை நீட்டிக்க முடிவு**

ராமநாதபுரம்:ராமநாதபுரம், துாத்துக்குடி மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மன்னார் வளைகுடா கடல்வள பாதுகாப்பு திட்டத்தை, கன்னியாகுமரி வரை நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது. மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகம் தனுஷ்கோடியில் இருந்து கன்னியாகுமரி வரை உள்ளது. இந்த காப்பகம் 10,500 சதுர கி.மீ.,க்கு பரந்து விரிந்துள்ளது. இதில் 3,600 வகையான கடல்வாழ் உயிரினங்கள் காணப்படுகின்றன.

இதுபோன்ற உயரிய பல்உயிரின அடர்த்தி இந்தியாவில் வேறு எங்கும் இல்லை. இந்த உயிர்க்கோளத்தில் 21 தீவுகளும் அதைச் சுற்றியுள்ள பவளப்பாறைகள் அமைந்த 560 சதுர கி.மீ., பகுதி தேசிய பூங்காவாக உள்ளது.

அறக்கட்டளை உருவாக்கம்: இப்பகுதியில் வெடி வைத்து மீன் பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துதல், இழுவலை பயன்பாடு, மாசுப்படுத்துதல் போன்றவற்றால் அரிய வகை கடல் வளங்களை பாதிப்புக்குள்ளாகின்றன. இதனை தடுக்க 2002 ல் ஐ.நா., நிதியுதவியுடன் மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளை மூலம் மன்னார் வளைகுடா கடல்வள பாதுகாப்பு மற்றும் கடல்சார் மீனவர் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2012 க்கு பின் ஐ.நா., நிதியுதவியை நிறுத்தியது. இதையடுத்து தமிழக அரசு அறக்கட்டளைக்கு நிதி ஒதுக்கி வருகிறது.

இந்த அறக்கட்டளை ராமநாதபுரம் மாவட்டம் தனுஷ்கோடியில் இருந்து துாத்துக்குடி மாவட்டம் பெரியதாளை வரை உள்ள 248 கிராமங்களில் மீனவர்களுக்கு மாற்றுத்தொழிலுக்கு தேவையான நிதியை வழங்குகிறது.

மேலும் கடல்வள விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. தற்போது இந்த திட்டத்தை தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து கன்னியாகுமரி மாவட்டம் வரை நீட்டிக்க தமிழகஅரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆய்வுகள் நடக்கின்றன.

## மெகா மீன் கண்காட்சி ராமநாதபுரத்தில் துவக்கம்



ராமநாதபுரம்,: வனஉயிரின வாரவிழாவையொட்டி மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளை சார்பில் ராமநாதபுரத்தில் மெகா கடல்வாழ் உயிரினங்களின் கண்காட்சி துவங்கியது. மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பகத்தில் மீன்கள் உட்பட 3,600 கடல்வாழ் உயிரினங்கள் உள்ளன. இதில் 54 உயிரினங்கள் அரிய வகை. வனஉயிரின வாரவிழாவையொட்டி கடல்வாழ் உயிரினங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ராமநாதபுரம் முகமதுசதக் தஸ்தகீர் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் மெகா கண்காட்சி நேற்று துவங்கியது. கலெக்டர் நந்தகுமார் துவக்கி வைத்தார். மயில்வாகனன் எஸ்.பி., அறக்கட்டளை இயக்குனர் டாங்கே, சுற்றுச்சூழல் வளர்ச்சி அலுவலர் சாகுல்அமீது பங்கேற்றனர்.

இதில் கடல் பசு, ஆவுலியா, அலுங்காமை, ஓங்கிகள், பெருந்தலை ஆமை, பால் சுறா, கங்கை சுறா, வேளாமீன், வெள்ளசுறா, சவுக்கு திருக்கை,

கடல் அட்டைகள், கடல் பஞ்சு போன்றவற்றின் பதப்படுத்தப்பட்ட மாதிரிகள் மற்றும் யானைக்கை, வாழைப்பூ சங்கு, தவளை சங்கு, பெரிய மட்டி, செம்பட சோவி, பழுப்பு புள்ளி சோவி, மூவரி சோவி, வரி சங்கு, குதிரை முள்ளி உள்ளிட்டவை வைக்கப்பட்டிருந்தன. மேலும் 30 க்கும் மேற்பட்ட கடல்நீர் தொட்டிகளில் வகை, வகையான உயிருள்ள மீன்கள் பார்ப்போரை சுண்டியிழுக்கும் வகையில் இருந்தன. இந்த கண்காட்சி நாளை வரை நடக்கிறது.

## துணிந்தால் துணிப்பையும் துணையாகும்: ஆசிரியையின் தூய்மை பணி



"அன்னை நம் பூமியை மாசாக மாற்றினோம், தாயான உன்னைத் தான் தரிசாக மாற்றினோம்" கு.நாட்டாப்பட்டி ஊராட்சி ஒன்றிய பள்ளி மாணவர்கள் பாடும் பாட்டு தான் இது. சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் மாணவர்கள், பூமித் தாயின் மேல் பாசம் கொண்டு எழுதிய பாடல் வரிகள் தான் இவை.

**மாணவர்களை சுற்றுச்சூழல் ஆர்வலராக மாற்றிய பள்ளியின் தமிழ் ஆசிரியை அலமேலம்மாள் கூறியதாவது:** பாடம் நடத்தும் போது,

மாணவர்களிடம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து நிறைய பேசுவேன். தலைமை ஆசிரியர் முத்தையா வழிகாட்டுதல் படி, மாணவர்கள், பெண்கள், நண்பர்களுடன் இணைந்து 'அப்துல் கலாமின் சிறகுகள்' என்ற, அமைப்பை துவங்கியுள்ளோம்.வாழ்க்கை கல்வி வகுப்பில் மாணவர்களுக்கு, வீட்டில் வீணாக கிடக்கும் ஆடைகளை கொண்டு கை பைகள்தயாரிக்க பயிற்சி கொடுத்துள்ளோம். மாணவர்கள் பாலிதீன் பைகளின் தீமைகள் குறித்து எடுத்துக்கூறி, கு.நாட்டாப்பட்டி கிராம கடைகளில் இந்த துணிப் பைகளை கொடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். ஏனென்றால் நாம் பரவலாக செயற்கை இழை ஆடைகளை தான் அணிகிறோம். இதுவும் பாலிதீன் போல மக்காத தன்மையுடையது. அதனால் தான் இந்த துணிகளை மறுபயன்பாட்டிற்கு மாற்றி வருகிறோம். துணிந்தால் துணிப்பையும் தூய்மைக்கு துணையாகும் என்பதற்கு இது ஒரு உதாரணம் என்று சொல்லலாம்.அதே போல், பாலிதீன் பைகளை நாம் பயன்படுத்திய பின் குப்பைத் தொட்டியில் போடக் கூடாது, சோப்பு தண்ணீரில் நன்றாக கழுவி மொத்தமாக சேர்த்து வைத்து எடைக்கு கொடுத்தால் அவர்கள் மறுசுழற்சிக்கு அனுப்பி விடுவார்கள். பல கிராமங்களில் எங்கள் சுற்றுச்சூழல் பணியை துவங்க இருக்கிறோம், என்றார்.

## தமிழகம், புதுச்சேரியில் மழை தொடரும்

சென்னை : வங்கக் கடலில் உருவாகி உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த 48 மணி நேரத்திற்கு கனமழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த சில நாட்களாக தமிழகத்தின் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பனை பொருள் உற்பத்தி ரூ.14 கோடிக்கு இலக்கு

சென்னை:நடப்பு ஆண்டில், 14 கோடி ரூபாய்க்கு பனை பொருட்களை உற்பத்தி செய்ய, பனை பொருள் வளர்ச்சி வாரியம் இலக்கு நிர்ணயித்துள்ளது.இந்தியாவில் முதன்முறையாக, பனை தொழிலுக்கு என, தமிழகத்தில் பனை பொருள் வளர்ச்சி வாரியம், 1994ல் துவக்கப்பட்டது. இதன்கீழ், 731 ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள், எட்டு மாவட்ட கூட்டுறவு சம்மேளனங்கள், ஒரு மாநில கூட்டுறவு இணையம் இருக்கின்றன.

பனை தொழிலாளர்களுக்கு உபகரணங்கள் வழங்குவது; பனை பொருள் உற்பத்தி மற்றும் விற்பனை ஆகியவற்றை வாரியம் செய்கிறது. நடப்பு ஆண்டில், 14 கோடி ரூபாய் மதிப்பில், பனை பொருள் உற்பத்தி செய்ய, இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதுபற்றி, அதிகாரிகள் கூறியதாவது: கடந்த ஆண்டில், 8,800 பேருக்கு பதநீர் இறக்க உரிமம் வழங்கப்பட்டது. அரசு வழங்கிய, 26 லட்சம் ரூபாய் மானியம் மூலம், உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 12 கோடி ரூபாய்க்கு, பனை பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, 14 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டது. இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

## விவசாயிகளை வல்லமைபடுத்தும் பேரணி கலெக்டர் வல்லவன் துவக்கி வைத்தார்

காரைக்கால்: காரைக்காலில் வலிமைமிகு பாரதம் படைப்பதற்காக, விவசாயிகளை வல்லமைபடுத்தும் அகில இந்திய பேரணியை கலெக்டர் வல்லவன் துவக்கிவைத்தார்.காரைக்கால் தாவீது பிள்ளை வீதியில் உள்ள பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயம் சார்பில், துாய்மையான, பொன்னான, வலிமைமிகு பாரதத்தை உருவாக்க, விவசாயிகளை வல்லமை படுத்தும் பேரணிக்கு ஏற்பாடு செய்யப் பட்டது.இப் பேரணியை, கலெக்டர் வல்லவன் துவக்கி வைத்தார். கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன், கோவில்பட்டி

ராஜயோக தியான ஆசிரியை செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இப்பேரணி, 7ம் தேதி முதல் வரும் 13ம் தேதி வரை காரைக்காலில் மாவட்டம் முழுவதும், யோகமுறை விவசாயத்தின் மூலம் சத்துமிக்க உணவுப்பொருட்களை உற்பத்தி செய்ய வழிகாட்டுதல், ஆன்மிக ஞானத்தினால் விவசாயிகளை மூடநம்பிக்கை, தீய பழக்கங்களிலிருந்து விடுவித்தல், குறைந்த செலவில் அதிக விளைச்சல் பெறுதல், எளிய முறை தியானத்தின் மூலம் நேர்மறை சிந்தனைகளை உருவாக்குதல், சுற்றுப்புறத்தை துாய்மைப்படுத்துதல் உள்ளிட்டவற்றை வலியுறுத்தி இப் பேரணி மேற்கொள்ளப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் 100க்கு மேற்பட்ட பிரம்மா குமாரிகள் கலந்து கொண்டனர்.

## செண்டுமல்லி செடிகள் அழுகியதால் இழப்பு!விலையும் குறைந்ததால் வேதனை

பொள்ளாச்சி: தொடர் மழையில், செடிகள் அழுகியதால் 'செண்டுமல்லி' சாகுபடியாளர்கள் பெரும் இழப்பை சந்தித்துள்ளனர். தொடர் வருமானத்தை எதிர்பார்க்கும் விவசாயிகள், நிரந்த சாகுபடி பயிர்களோடு, குறுகிய கால லாப நோக்கிலான பயிர்களையும் பயிரிட்டு வருகின்றனர். இன்றைய நிலையில், தக்காளி சாகுபடியை முக்கிய பயிராக விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். அடுத்தபடியாக பந்தல் சாகுபடி காய்கறிகளான பாகல், பீர்க்கன் மற்றும் புடலை சாகுபடி அதிகமாக மேற்கொள்ளப்படுகிறது. ஒரு சில விவசாயிகள், தங்கள் நிலத்தின் ஒரு பகுதியை நிரந்தர மலர் சாகுபடிக்கு ஒதுக்கியுள்ளனர். பொள்ளாச்சியின் மேற்கு பகுதியில், சில விவசாயிகள் மலர் சாகுபடியை மேற்கொண்டுள்ளனர். கடந்த சில நாட்களாக, கேரள எல்லையோரம், அவ்வப்போது பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், சாகுபடி நிலத்தில் இன்னும் கூட மழை நீர் தேங்கியுள்ளது.

இதனால், இந்நிலத்தில் கால்வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இம்மழை தென்னை மற்றும் பயிர் விளைச்சலுக்கு ஏற்றது என்றாலும், மலர் சாகுபடிக்கு இது உகந்ததல்ல. மாப்பிள்ளைகவுண்டனூரில் சாகுபடி செய்யப்பட்ட செண்டு மல்லி பூக்கள் தொடர் மழையால் பாதிக்கப்பட்டு, பொலிவை இழந்துள்ளது. செடியும் அழுகியுள்ளது. இதனால், அடுத்து வரும் லாபத்தை இழந்த நிலையிலும், பூக்களை பறிக்காமல் விட்டுள்ளார்.

**'கிலோ ரூ.25க்கு விற்கிறது'** விவசாயி பொன்ராஜ் கூறியதாவது: கடந்த, 15 ஆண்டுகளாக மலர் சாகுபடி மேற்கொண்டுள்ளேன். ஆலாந்துறை பகுதியில் இருந்து நாற்று வாங்கப்படுகிறது. நடப்பு ஆண்டில், தென்னை சாகுபடிக்கிடையில் ஒரு ஏக்கரில் நடவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் நல்ல விலை கிடைத்தது. ஓணம் நேரத்தில் கிலோ, 70 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, கிலோ, 25 ரூபாய்க்கு விற்கிறது. சமீபத்தில் பெய்த தொடர் மழையால் பூக்கள் பறிக்க முடியவில்லை. இதனால் பூக்கள் பொலிவிழந்து, கருகி விட்டன. மழை நீர் தேங்கியதால் செடிகளும் அழுகும் நிலைக்கு வந்து விட்டன. ஏறக்குறைய, 30 ஆயிரம் ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுவிட்டது. ஆனாலும், நான்கு மாத பயிரான செண்டுமல்லி வரும் ஜூன், ஜூலையில் மீண்டும் நடவு செய்யப்படும் இவ்வாறு அவர் கூறினார்.

## நெல் விலை உயர்வால் அரிசி விலை எகிறும் அபாயம்: நெல்லுக்கான ஆதார விலை அதிகரிப்பு எதிரொலி

சேலம்: "தமிழக அரசு, நெல்லுக்கான ஆதார விலையை அதிகரிப்பு செய்துள்ள நிலையில், கர்நாடகாவிலும் நெல் விலை உயர்ந்துள்ளதால், தமிழகத்தில் அரிசி விலையில் உயர்வு ஏற்படும்," என, தமிழக நெல் அரிசி வணிக சம்மேளன, மாநில முன்னாள் துணைத் தலைவர் சியாமளநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது: தமிழக அரசு நெல்லுக்கான ஆதார கொள்முதல் விலையை, மோட்டா ரகத்துக்கு கிலோ, 13.50 ரூபாயில் இருந்து, 14.60 ரூபாயாகவும், சன்ன ரகத்துக்கு, 14.10 ரூபாயில் இருந்து, 15.10 ரூபாயாக அதிகரித்துள்ளது. இந்த விலை உயர்வு தமிழகத்தில், நெல் அறுவடை துவங்கும் நவம்பர் மாதத்தில் அமலுக்கு வரும் நிலையில், அந்த நெல்லை வாங்கி அரிசியாக மாற்றும் நிலையில், அரிசியின் குறைந்த பட்ச விலை கிலோவுக்கு, 28 ரூபாயில் இருந்து, 30 ரூபாயாக உயர்ந்து விட வாய்ப்புள்ளது. மத்திய அரசு வடமாநிலங்களில் இருந்து ரயில் மூலம் கொண்டு வரப்படும் நெல்லுக்கான வாடகை கட்டணத்தில், 6.45 சதவீதம் வரை உயர்த்தி உள்ளது. நெல்லை வாங்கும் போது, பிற செலவுகளையும், அதன் மீது சேர்க்கும் பட்சத்தில், அரிசியின் குறைந்த பட்ச விலை, 40 ரூபாய் என்ற நிலையை எட்டி விடும். கர்நாடகாவில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருக்கும், கே.டீலக்ஸ் நெல் கிலோ, 24 ரூபாயில் இருந்து, 27 ரூபாயாகவும், காவேரி சோனா நெல் கிலோ, 15 ரூபாயில் இருந்து, 22 ரூபாயாக விலை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் விளையும், பி.பி.டி., (பாபத்லால் பொன்னி) நெல் கிலோ, 19 ரூபாயில் இருந்து, 25 ரூபாயகவும், வெள்ளைப் பொன்னி கிலோ, 25 ரூபாயில் இருந்து, 28.60 ரூபாயாக உயர்ந்துள்ளது. நெல்லின் விலை, கிலோ, 3 ரூபாயில் இருந்து, 6 ரூபாய் வரை, அதிகரித்துள்ளது. இந்த நெல்லை வாங்கி அரிசியாக உற்பத்தி செய்து, விற்பனைக்கு கொண்டு வரும் நிலையில், ஒவ்வொரு ரக அரிசியின் விலையிலும், கிலோவுக்கு, 3 ரூபாய் முதல், 5 ரூபாய் வரையில் உயர வாய்ப்புள்ளது. இந்த உயர்வு, இன்னும் ஒரு வாரத்தில் அமலுக்கு வந்தாலும், ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவ்வாறு, அவர் கூறினார். நெல் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு, அரிசி விலையில், எதிரொலிக்கும் பட்சத்தில், அனைத்து ரக அரிசி விலையிலும்,

கிலோவுக்கு, இரண்டு ரூபாய் முதல், மூன்று ரூபாய் வரை விலை உயர்வு ஏற்படும்.

நேற்றைய அரிசி விலை நிலவரம்: வெள்ளை பொன்னி (பழசு) கிலோ ரூ.53, வெள்ளை பொன்னி (புதுசு) கிலோ ரூ.49, கர்நாடகா பொன்னி கிலோ ரூ.45, கர்நாடகா டீலக்ஸ் கிலோ ரூ.39, பி.பி.டி., (பாபத்லால் பொன்னி) ரூ.43, இட்லி கார் முதல் தரம் கிலோ ரூ.41, இட்லி கார் தரம் 2 கிலோ ரூ.38, இட்லி கார் நொய் (குருணை) கிலோ ரூ.35, ஐ.ஆர்.20 கிலோ ரூ.30, பச்சை பொன்னி அரிசி கிலோ ரூ.49, 2 தரம் கிலோ 47, 3 தரம் கிலோ ரூ.45 என விற்பனையானது.

## முளைப்பு திறன் இல்லாத 7 டன் சோளம்: திருப்பி அனுப்ப அதிகாரிகள் முடிவு

ஈரோடு: முளைப்பு திறன் இல்லாத, 7 டன் சோளத்தை, திருப்பி அனுப்ப கால்நடைத்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாக, ஈரோடு கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் பழனிசாமி தெரிவித்தார்.

ஈரோடு மாவட்டத்தில், 65 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டம் முழுவதும், 3 லட்சத்து, 79,700 கால்நடைகள் உள்ளன. மேலும், 4 லட்சத்து, 74,000 வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் உள்ளன. கால்நடைகளின் உற்பத்தி திறனுக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் முக்கியமானதாக உள்ளது. கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறையை போக்கும் விதத்திலும், விவசாயிகளை மேம்படுத்தும் வகையிலும், தமிழக அரசு கடந்த நான்காண்டாக, மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ், தமிழக அரசு, ஈரோடு கால்நடை பராமரிப்புத்துறை மூலம், 2,500 ஏக்கருக்கு, 2,692 பயனாளிகளுக்கு சோளம் இலவசமாக மானியத்தில் வழங்க உள்ளது.

இது குறித்து மண்டல இணை இயக்குனர் பழனிசாமி கூறியதாவது: ஒவ்வொரு ஏக்கருக்கும், பயனாளிகளுக்கு, 12 கிலோ சோளம் வழங்கப்படும். தற்போது ஈரோடு, கோபி பகுதியில் பயனாளிகளுக்கு வழங்க, 30 டன் சோளம், ஈரோடு கால்நடை பராமரிப்புத்துறைக்கு வந்துள்ளது. அதில், கோபி பகுதிக்கு, 18.6 டன்னும், ஈரோடு வட்டாரத்துக்கு, 11.4 டன்னும் வழங்கப்படும். கோபியில் இதுவரை, 10 டன்னுக்கு மேல் சோளம் வழங்கபட்டது. இந்த சோளத்தை சோதித்து பார்த்தபோது, அதில், ஏழு டன் சோளம் முளைப்பு திறன் இல்லாததை கண்டு, அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர். மேலும் அந்த சோளத்தை பரிசோதனை கூடத்துக்கு அனுப்பி உள்ளனர். பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டால், ஏழு டன் சோளம் திருப்பி அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு, அவர் கூறினார்.

## குறுவை நெல் கொள்முதல் செய்ய கொள்முதல் நிலையங்கள் திறப்பு

திருச்சி: திருச்சியில், குறுவை நெல் அறுவடை சீஸன் துவங்கியுள்ளதால், மாவட்டத்தில், துறையூர், லால்குடி தாலுகாக்களில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், நேற்று திறக்கப்பட்டன.

திருச்சி மாவட்டத்தில், மண்ணச்சநல்லூர், லால்குடி, துறையூர், முசிறி உள்ளிட்ட பகுதிகளில், 2,00க்கும் மேற்பட்ட ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. இதில், லால்குடியை அடுத்த டி.கல்விக்குடி, கே.வி. பேட்டை, ஆலங்குடி, மகாஜனம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள, 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட குறுவை நெல் அறுவடை துவங்கியுள்ளது. இந்நிலையில், மாவட்ட முழுவதும் நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, லால்குடி தாலுகாவில், அபிஷேகபுரம், அன்பில், அரியூர், கல்விக்குடி, செம்பரை, திண்ணியம்,

நகர், பூவாளூர் ஆகிய இடங்களிலும், துறையூர் தாலுகாவில், டி.மேட்டூர், ஆலந்துடையான்பட்டி ஆகிய இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், நேற்று திறக்கப்பட்டுள்ளன. 'இந்த கொள்முதல் நிலையங்களில், சன்ன ரகம் ஒரு குவிண்டாலுக்கு, 1,520 ரூபாயும், பொது ரகம் ஒரு குவிண்டாலுக்கு, 1,460 ரூபாயும் வழங்கப்படும்' என, மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

## கருவேல மரங்களை வெட்டுவதற்கு அனுமதிக்க கவுன்சிலர் வலியுறுத்தல்

நிலக்கோட்டை : சீமைக் கருவேல மரங்களை வெட்டுவதற்கு மாவட்ட நிர்வாகத்தின் அனுமதி பெற்றுத் தர வேண்டும் என பேரூராட்சி கவுன்சிலர்கள் கூட்டத்தில் வேண்டுகோள் வைக்கப்பட்டது.

நிலக்கோட்டை பேரூராட்சி கவுன்சிலர்கள் கூட்டம் தலைவர் சேகர் தலைமையில் நடந்தது. துணை தலைவர் சதீஸ்குமார் முன்னிலை வகித்தார். செயல்அலுவலர் முருகேசன் வரவேற்றார். வார்டு பகுதிகளில் நிறைவேற்ற வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜோசப்(11வது வார்டு): சீமைக்கருவேல மரங்களை அகற்றுவதற்கு மாவட்ட அனுமதி பெற்றுத்தர வேண்டும்.

தலைவர்: அனுமதி பெறுவதற்கு முயற்சி செய்வோம். அகற்றுவதற்கான செலவு யார் செய்வது?ஜோசப்: இதற்கென இயக்கம் ஒன்று செயல்படுகிறது. அவர்கள் செலவிலேயே மரங்களை அகற்றி விடுவர். தேவையென்றால் வேறு மரக்கன்றுகளை நடவு செய்து கொடுப்பர்.தலைவர்: புதிதாக வீடு கட்ட அனுமதி கேட்போரிடம் கண்டிப்பாக 2 மரங்கள் வளர்க்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

பட்டம்(15வது வார்டு): பழைய வீட்டை புதுப்பிப்பவர்களிடம் கேட்க முடியாது.

தலைவர்: சுற்றுச்சூழலை காப்பதில் பொதுமக்களுக்கு அக்கறை இருக்கிறது. மரம் நடுவதற்கு ஒத்துழைப்பு தருவார்கள்.

முருகேசன்(1வது வார்டு): வள்ளி நகரில் துப்பரவு பணியாளர்கள் வசிக்கின்றனர். அங்கு தெருக்களில் தார் அல்லது சிமென்ட் ரோடு அமைக்க நான்கு கூட்டங்களில் வலியுறுத்துகிறேன். ஒரு பணி கூட தேர்வு செய்யவில்லை.

செயல்அலுவலர்: வரும் கூட்டத்தில் நீங்கள் கூறும் கோரிக்கை நிறைவு செய்யப்படும்.

கூட்டம் முடியும் தறுவாயில் 10வது வார்டு மணியக்காரன்பட்டியைச் சேர்ந்தவர்கள் தலைவரிடம் குடிநீரை சீராக வழங்க வேண்டும், என்றனர். உடனடியாக மணியக்காரன்பட்டிக்கு குடிநீர் வினியோகம் செய்பவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

## திராட்சையில் செவட்டைநோய் தாக்கும் வாய்ப்புகள் அதிகம்

கம்பம்:கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்யப்பட்டுள்ள திராட்சையில் செவட்டை நோய் தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என திராட்சை ஆராய்ச்சி நிலையம் எச்சரித்துள்ளது.

கம்பம் ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சிநிலைய பேராசிரியர் பார்த்திபன், உதவி பேராசிரியர் சுப்பையா கூறியதாவது:

கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்யப்பட்டுள்ள திராட்சையில் செவட்டை நோய் தாக்குவதற்கான வாய்ப்புகள் உள்ளது. இதனை தடுக்க புதிதாக கவாத்து அடித்த தோட்டங்களில் கீழ்நோக்கி வளர்ந்திருக்கும் தண்டுகளில் செவட்டை நோய் பரப்பும் பூஞ்சான்கள் இருக்கும். அவற்றை எடுத்து விட வேண்டும். அடிஇலைகளை எடுத்து நன்கு காற்றோட்டம் இருக்குமாறு செய்ய வேண்டும். அத்தோடு கர்சேட் 1.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருடன் அல்லது மெட்டாலாசில் மேங்கோசெப் 2 கிராம் ஒரு

லிட்டர் தண்ணீருடன் அல்லது அசாக்ரி ஸ்டோடி 5 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.

செவட்டை நோய் தாக்கியிருக்கும் பட்சத்தில் விவசாயிகள் திராட்சை ஆராய்ச்சி நிலையத்தை தொடர்பு கொண்டு ஆலோசனைகள் பெறலாம் என்றும் கூறியுள்ளனர்.

**வெற்றிலை பயிரிடும் விவசாயிகளுக்கு சுழல் நிதி கடன் வழங்க கோரிக்கை**

தேனி:வெற்றிலை பயிரிடும் சிறு விவசாயிகளுக்கு சுழல்நிதி கடன் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் பெரியகுளம், உத்தமபாளையம் தாலுகாக்களில் அதிகளவில் விவசாயிகள் வெற்றிலை சாகுபடி செய்கின்றனர். பல ஆண்டுகளாக வெற்றிலையில் வாடல் நோய் பாதிப்பு ஏற்பட்டு

மீள முடியாமல் தவிக்கின்றனர். வெற்றிலை சாகுபடிக்காக வட்டிக்கு வாங்கி சாகுபடி செய்து பயிர் ஒரு ஆண்டு வளர்ந்த நிலையில் மகசூல் பெறுவதற்கு முன்பே வாடல் நோய் தாக்கத்தில் பாதிக்கப்பட்டு விடுகின்றனர். கடன், வட்டியினை முறையாக செலுத்த முடியாமல், கடனில் இருந்து மீள முடியாமல் பலர் கிராமங்களை விட்டு காலி செய்துள்ளனர்.

வெற்றிலை சாகுபடியை தனி ஒரு விவசாயி மட்டும் செய்ய முடியாது. குறைந்த பட்சம் 15 சிறு விவசாயிகள் சேர்ந்து ஒவ்வொருவரும் ரூ.3 லட்சம் வீதம் முதலீடு செய்தால் தான் வெற்றிலை சாகுபடி செய்ய முடியும். இவ்வளவு முதலீடு செய்து வாடல் நோய் பாதித்தால் 15 விவசாயிகளும் நஷ்டமடையும் நிலை ஏற்படும்.

மகளிர் சுய உதவிக்குழு, ஆண்கள் சுய உதவிக் குழுவினருக்கு அரசு சுழல் நிதி, பெருங்கடன் வழங்குவது போல் வெற்றிலை விவசாயிகளை குழுவாக அங்கீகரித்து அவர்களுக்கு குறைந்த வட்டியில்

சுழல்நிதி,குறுகிய கால கடனுதவி, நீண்டகால கடனுதவி திட்டங்களில் கடன் வழங்கினால் வெற்றிலை விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். மேலும் வெற்றிலை அறுவடைக்கு வரும்போது கடனை திருப்பி செலுத்துவதில் உத்திரவாதம் ஏற்படும்.

வெற்றிலை மருத்துவ குணம் வாய்த்துள்ளதால் இதனை மதிப்பு கூட்டி மருந்து பொருளாக மாற்றிட ஆராய்ச்சிகள் செய்து மருந்து பொருளாக விற்பனைக்கு கொண்டு வரவேண்டும் என வெற்றிலை விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பழ வகை மரங்கள் நடுவதற்கு இதுவே தருணம்!**

பழ வகை மரங்களை வீடுகளிலும், தோட்டங்களிலும் வளர்ப்பதால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன் சத்தான கனி வகைகள் கிடைக்கின்றன. எனவே, பருவ மழை தொடங்கவுள்ள இத்தருணத்தில் பழ மரங்கள் நடவுசெய்ய தோட்டக்கலைத் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சேரன்மகாதேவி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மா மரம்: வரிசைக்கு வரிசை 7 - 10 மீ, செடிக்கு செடி 7 - 10 மீ இடைவெளியில் நடவு செய்யலாம். அடர் நடவு முறையானால் வரிசைக்கு வரிசை 5 மீ, செடிக்கு செடி 5 மீ இடைவெளி விட்டு நடவு செய்யலாம். 3 அடிக்கு 3 அடிக்கு 3 அடி என்ற அளவில் எடுக்கப்பட்ட

குழிகளில் 10 கிலோ தொழு உரம், ஒரு கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 1.3 சதவீதம் லிண்டேன் குருணை 100 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட்டு, ஒட்டு மாங்கன்றுகளை ஒட்டுப்பகுதி தரைநிலையிலிருந்து அரை அடி உயரத்தில் இருக்குமாறு நட வேண்டும்.

முதலாண்டு ஒரு மரத்துக்கு 10 கிலோ தொழு உரம், 450 கிராம் யூரியா, 1,250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இடவேண்டும். ஆண்டுதோறும் மரம் ஒன்றுக்கு முந்தைய ஆண்டு உர அளவுடன் மேற்கண்டவாறு உரங்களை கூடுதலாக சேர்த்து இடவேண்டும்.

6ஆவது ஆண்டிலிருந்து ஒரு மரத்துக்கு 50 கிலோ தொழு உரம், 2.25 கிலோ யூரியா, 6.25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2.50 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்கள் இடவேண்டும்.

நெல்லி: வரிசைக்கு வரிசை 6 மீ, செடிக்கு செடி 6 மீ இடைவெளியில் நடவு செய்யலாம். 3 அடிக்கு 3 அடிக்கு 3 அடி என்ற அளவில் எடுக்கப்பட்ட குழிகளில் 10 கிலோ தொழு உரம் 1 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 1.3 சதவீதம் லிண்டேன் குருணை 100 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட்டு, ஓட்டு நெல்லிக் கன்றுகளை நடவேண்டும்.

நான்காம் ஆண்டு காய்க்கத் தொடங்கியதும், ஆண்டுக்கு ஒரு மரத்துக்கு 50 கிலோ தொழு உரம், 1.50 கிலோ யூரியா, ஒரு கிலோ சூப்பர் பாஸ்பேட், ஒரு கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை இரு முறை பிரித்து இடவேண்டும்.

சப்போட்டா: வரிசைக்கு வரிசை 8 மீ, செடிக்குச் செடி 8 மீ இடைவெளியில் நடவு செய்யலாம். அடர் நடவு முறையில் வரிசைக்கு வரிசை 8 மீ, செடிக்குச் செடி 4 மீ இடைவெளியில் நடவு செய்யலாம். 3 அடிக்கு 3 அடிக்கு 3 அடி அளவில் எடுக்கப்பட்ட குழிகளில் 10 கிலோ தொழு உரம், ஒரு கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 1.3 சதவீதம் லிண்டேன்

குருணை 100 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட்டு, ஒட்டு சப்போட்டா கன்றுகளை நடவேண்டும்.

முதலாண்டு ஒரு மரத்துக்கு 10 கிலோ தொழு உரம், 450 கிராம் யூரியா, 1,250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இடவேண்டும். ஒவ்வோர் ஆண்டும் மரம் ஒன்றுக்கு இதே அளவில் கூடுதலாக உரமிட வேண்டும். 6ஆம் ஆண்டு முதல் ஒரு மரத்துக்கு 50 கிலோ தொழு உரம், 2.2.5 கிலோ யூரியா, 6.25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2.50 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை இடவேண்டும்.

எலுமிச்சை: வரிசைக்கு வரிசை 5 மீ, செடிக்கு செடி 5 மீ இடைவெளியில் நடவேண்டும். 2.5 அடிக்கு 2.5 அடிக்கு 2.5 அடியில் எடுக்கப்பட்ட குழியில் நடவு செய்யும்போது, குழிக்கு 10 கிலோ தொழு உரம், 250 கிராம் வேப்பம் பிண்ணாக்கு இட்டு நடவேண்டும்.

முதல் ஆண்டுக்கு மரத்துக்கு 10 கிலோ தொழு உரம், 450 கிராம் யூரியா, 625 கிராம் சூப்பர் பாஸ்பேட், 170 கிராம் பொட்டாஷ் உரங்களை இடவேண்டும். ஆண்டுதோறும் மரத்துக்கு 5 கிலோ தொழு உரம், 220 கிராம் யூரியா, 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 70 கிராம் பொட்டாஷ் உரங்களை அதிகரித்து இடவேண்டும்.

6ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் 30 கிலோ தொழு உரம், 1,350 கிராம் யூரியா, 1,250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் பொட்டாஷ் உரங்களை இடவேண்டும். இவ்வாறு இடும் உரங்களில் மார்ச் மாதத்தில் யூரியா மட்டும், அக்டோபர் மாதத்தில் பாதியாக பிரித்து இடுதல் வேண்டும்.

கொய்யா: வரிசைக்கு வரிசை 5 - 6 மீ, செடிக்கு செடி 5 - 6 மீ இடைவெளியில் நடவேண்டும். 1.5 அடிக்கு 1.5 அடிக்கு 1.5 அடி என்ற அளவில் எடுக்கப்பட்ட குழியில் 10 கிலோ தொழு உரம், ஒரு கிலோ

வேப்பம் பிண்ணாக்கு, 1.3 சதவீதம் லிண்டேன் குருணை 50 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட்டு, கொய்யா பதியன் கன்றுகளை நடவேண்டும்.

மார்ச், அக்டோபரில் காய்க்கத் தொடங்கிய மரங்களுக்கு மரத்துக்கு 50 கிலோ தொழு உரம், 2.25 கிலோ யூரியா, 6.25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1.75 கிலோ மூரேட் ஆப் பொட்டாஷ் உரங்களை 2ஆகப் பிரித்து இடவேண்டும். கொய்யா மகசூலை மேம்படுத்த ஒரு சதம் யூரியா, அதாவது ஒரு லிட்டர் நீரில் 10 கிராம் கலந்து, அரை சதவீதம் துத்தநாக சல்பேட்டை ஒரு லிட்டர் நீரில் 5 கிராம் அளவில் கலந்த கரைசலை மார்ச், அக்டோபரில் இலைவழி உணவாகத் தெளிக்க வேண்டும்.

பழ மரக் கன்றுகளை ஒட்டுப் பகுதி தரையிலிருந்து அரை அடி உயரத்தில் இருக்குமாறு நடவேண்டும். ஆதரவுக்கு குச்சி நட்டு, தளர்வாகக் கட்டிவிடவேண்டும். உரங்களை மரத்திலிருந்து ஒன்றரை அடி விட்டு இலைப் பரப்புக்குள் அரை வட்டமாக முக்கால் அடி ஆழக் குழியில் வைத்து மூடவேண்டும்."பழ மரக் கன்றுகளை ஒட்டுப் பகுதி தரையிலிருந்துஅரை அடி உயரத்தில் இருக்குமாறு நட வேண்டும். ஆதரவுக்கு குச்சி நட்டு, தளர்வாகக் கட்டிவிடவேண்டும். உரங்களை மரத்திலிருந்து ஒன்றரை அடி விட்டு இலை பரப்புக்குள் அரை வட்டமாக முக்கால் அடி ஆழக் குழியில் வைத்து மூட வேண்டும்."

**மண்ணுக்கு வலு சேர்க்கும் பசுந்தழை உரங்கள்**

ரசாயன உரங்களால் மண்ணின் தன்மை நாளுக்கு நாள் மாறி வரும் நிலையில், பசுந்தழை உரம் மண்ணுக்கு தழைச்சத்தை அளித்து பசுமையான விவசாயத்துக்கு வழி வகுக்கிறது.

இதுகுறித்து திரூரில் இயங்கி வரும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தினர் கூறியது: பசுந்தாள், பசுந்தழை என்பது மண்ணுக்கு வளம் சேர்க்கும் இன்றிமையாத உரமாகும். மண்ணுக்கு தழைச்சத்தை அதிகளவில் கொடுக்கும் உரமாக பசுந்தாள், பசுந்தழை உரங்கள்

உள்ளன.

பசுந்தாள் உரம் என்பது தக்கைப் பூண்டு, சணப்பை, மணிலா அகத்தி, கொளஞ்சி, நரிப்பயிறு ஆகியனவாகும்.

பசுந்தாள் என்பது சித்தகத்தி, கிளைரிசிடியா ஆகியனவாகும்.

பசுந்தழை உரம்: இலை தழைகளையும், புங்கம், வேம்பு, கிளைரிசிடியா, வேலிமசால், பூவரசு, ஆவாரை, எருக்கு, வாகை போன்ற இலைகளையும் வெட்டி வயலுக்கு இடுவது பசுந்தழை உரமாகும்.

சித்தகத்தி பருவம்: எல்லா பருவத்துக்கும் ஏற்றதாகும். குறிப்பாக மார்ச்-ஏப்ரல் மாதங்கள் சிறந்த பருவ காலமாகும். எல்லா மண் வகைகளுக்கும் ஏற்றதாகும்.

விதை அளவு: ஒரு ஹெக்டேருக்கு 30 முதல் 40 கிலோ விதை தேவைப்படும்.

விதை நேர்த்தி: குறிப்பிட்ட ரைசோபியம் நுண்ணுயிர் உரத்தை ஒரு ஹெக்டேருக்கு 5 பாக்கெட் என்ற அளவில் விதையுடன் கலந்து விதைக்க வேண்டும். கை விதைப்புக்கு 30 சென்டி மீட்டருக்கு 10 சென்டி மீட்டர் என்ற அளவில் இடைவெளி விட வேண்டும்.

இதற்கு உரங்கள், பயிர் பாதுகாப்பு அவசியமில்லை. தேவைப்படும் பட்சத்தில் புரனோபாஸ் ஒரு சதவீதத்தை பூ, காய் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

நீர்ப்பாசனம்: 15 நாள்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும்.

அறுவடை: விதைத்த 45 முதல் 60 நாள்களில் மண்ணில் மடக்கி உழவு செய்ய வேண்டும். கிளைரிசிடியா: பொதுவாக மழைக்காலங்களில் இதை நடலாம். ஜூலை, ஆகஸ்ட் அல்லது செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இதன் நாற்றுகளை நடலாம்.

இது எல்லா மண் வகைகளிலும் வளரும் தன்மை உடையது.

வளர்க்கும் முறை: கிளைரிசிடியா விதைகள் அதிகளவில்

கிடைப்பதில்லை. எனவே இதை பதியன் போட்டு நடவு செய்யலாம். நன்கு முற்றிய நிலையில் உள்ள குச்சிகளை சாணக் கரைசலில் நனைத்து நட வேண்டும். வரப்புகளின் ஓரங்களில் 2 மீட்டர் இடைவெளியில் நடலாம். வருடத்துக்கு இரண்டு முறை இதன் இலைகளை பறித்து பசுந்தழை உரமாக இடலாம்.

மழைக் காலங்களில் இலைகளையும், தண்டு பகுதிகளையும் அறுத்து உரமாக பயன்படுத்தும் போது மீண்டும் நன்கு வளர ஏதுவாகின்றது.

இதற்கு பயிர் பாதுகாப்பு, உரங்கள் அவசியமில்லை. இந்த முறையில் பயிரிட்டால் ஒரு வருடத்துக்கு ஒரு கிளைரிசிடியா செடியில் இருந்து 20 கிலோ தழைச்சத்து கிடைக்கிறது.

வைக்கோலும் உரம் தான்: நெல் அறுவடைக்குப் பின் வயலில் உள்ள தாள்களையும், வைக்கோலையும் உரமாக பயன்படுத்தலாம். நெல் வைக்கோலில் 6 சதவீத கந்தகச் சத்து, 1.37 சதவீத சாம்பல் சத்து, சிலிக்கான், 40 சதவீத கரிமம் ஆகிய சத்துகள் உள்ளன.

வைக்கோலை வயலில் மடக்கி உழுவதால் ஹெக்டேருக்கு 45 கிலோ தழைச்சத்தும், 7 முதல் 10 கிலோ மணிச்சத்து கிடைக்கிறது. மேலும் நிலத்தில் சாம்பல் சத்து, கந்தகச் சத்து, சிலிக்கான், மயில் துத்தம், இரும்புச் சத்து போன்ற நுண்ணூட்ட சத்துகளையும் மண்ணில் கூட்டுகிறது.

வைக்கோலை வயலில் ஒரு மாதத்துக்கு முன்பு இட்டு மக்க வைத்து உழுத பிறகே நெல் நடவு செய்ய வேண்டும். இதுபோல் விவசாயிகள் இயற்கை முறையில் விவசாயம் செய்து தங்களது சாகுபடியை பெருக்கலாம் என்றனர்.

## அழிந்து வரும் நிலையில் நீலகிரி மார்டென்!



மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளுக்கே உரிய அரிய வகை உயிரினமான "நீலகிரி மார்டென்' எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது. சுற்றுச்சூழல் மாசுப்படுவது, காடுகள் அழிக்கப்படுவது ஆகியவற்றால் "நீலகிரி மார்டென்' இப்போதெல்லாம் இயற்கை ஆர்வலர்களுக்கு அரிதாகவே காட்சியளிக்கிறது.

நீலகிரி மார்டென் (சண்ப்ஞ்ண்ழ்ண் ஙஹழ்ற்ங்ய்) என ஆங்கிலத்திலும் "கொம்பு புலி' என பொதுவாக அழைக்கப்படும் இது, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் காணப்படும் மிக அரிதான உயிரினங்களில் ஒன்று.

நீலகிரி மார்டென் மரநாய், கீரி, நீர்நாய் முதலிய சிறு ஊனுண்ணி வகையைச் சேர்ந்தது. மரநாயைப் போன்ற உடலும், நீண்ட அடர்ந்த வாலும், அழகான வெளிர் மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிற கழுத்தும் கொண்ட ஒரு அழகான உயிரினமாகும்.

நீலகிரி மார்டென் வால் தவிர உடல் 55 முதல் 65 செ.மீ நீளமும் வால் 40 முதல் 45 செ.மீ நீளமும் இருக்கும். எடை ஏறத்தாழ 2.1 கிலோ கொண்டது.

நீலகிரி மார்டென் பகலில் வேட்டையாடும். மரத்தை வாழிடமாகக் கொண்டிருந்தாலும் அவ்வப்போது தரைக்கு வரும். இந்த உயிரினம் சிறு பாலூட்டிகள், பறவைகள், பூச்சி முதலானவற்றை உணவாகக்

கொள்கிறது.

மலையின் வளங்கள்: மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியான நீலகிரியில் புலி, யானை, கரடி, கொம்பு புலி, செந்நாய், பழுப்பு மரநாய், அலங்கு, சிறுத்தைப் பூனை, வரையாடு, நீலகிரி கருமந்தி, சிங்கவால் குரங்கு, பறக்கும் அணில் மலபார் முள்வால் எலி, பெரிய இருவாசி, கருப்பு மரங்கொத்தி, காட்டுக்குருகு, கருநாகம், பறக்கும் பல்லி, பல வகையான பூச்சிகள் மற்றும் பல தாவரங்கள் உள்ளன.

20 ஆண்டுகளுக்கு முன்பு வரை நீலகிரி மாவட்டத்துக்கு சுற்றுலா செல்பவர்கள் நீலகிரி மார்டென் உயிரினத்தை எளிதாக காணலாம். மரத்துக்கு மரம் தாவுவதை சுற்றுலா செல்பவர்கள் எளிதாக கண்டு மகிழ்ந்தனர்.

ஆனால், இப்போதோ நீலகிரி மார்டெனை காணுவது அரிதாகி வருகிறது. மேலும் நீலகிரி மார்டென் அழிவின் விளிம்பில் இருக்கும் விலங்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை உணவுகள்: நீலகிரி மார்டென் பெரும்பாலும் மனிதர்களை தவிர்க்க கூடியவை. ஆனால் அண்மை காலங்களில் மனிதர்கள் காடுகளில் வீசும் உணவுப் பண்டங்களையும் உண்ணத் தொடங்கிவிட்டதாக வன உயிரின ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நீலகிரி மார்டென் வனத்தில் கிடைக்கும் பழங்கள் போன்றவற்றை உள்கொள்ளும் போது விழும் எச்சத்தால், செடிகள் முளைக்க வாய்ப்புள்ளது. இதுபோன்று செடிகள் முளைப்பதால், மான் போன்ற விலங்குகளுக்கு உணவு எளிதில் கிடைத்தது.

இந்நிலையில், வனத்தில் போதிய உணவு கிடைக்காத நிலையில், வனத்தை விட்டு சமவெளிப் பகுதிக்கு வந்த நீலகிரி மார்டென் மனிதன் தூக்கி எறியும் உணவை உட்கொள்ள தொடங்கியுள்ளது.

இது குறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறியது: நீலகிரி மார்டென் சாதுவாக தெரிந்தாலும் முன்பெல்லாம் மனிதன் அதனை சீண்டினால் கடித்துவிடும். ஆனால், இப்போது சுற்றுலாப் பயணிகள் அதிகரிக்கத்

தொடங்கியுள்ளதால், அவை மனிதனுடன் இணைந்து வாழ பழக்கப்பட்டுவிட்டது.

எனவே அவை மனிதன் தரும் உணவுகளையும் உட்கொண்டு அழியத் தொடங்கியுள்ளது.

தமிழகத்தில் நீலகிரி மார்டென் அதிகமாக களக்காடு, தேனி, நீலகிரி, முதுமலை, பொள்ளாச்சி, வால்பாறை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன என்றார் அவர்.

**வட மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தின் வட மாவட்டங்கள், புதுச்சேரியில் ஆங்காங்கே வியாழக்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. தென் மேற்குப் பருவ மழை காலத்தில் ஏற்பட்ட வெப்பச்சலனத்தால், தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. தொடர்ந்து புதன்கிழமையும் மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி, செங்கல்பட்டில் 70 மி.மீ. மழையும், மயிலாடுதுறை, அறந்தாங்கி, சாத்தூர், பெரம்பலூரில் 60 மி.மீ, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர், திருமயம், திருச்சி மாவட்டம் மருங்காபுரி, புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம், பொன்னேரி உள்ளிட்ட இடங்களில் 50 மி.மீ. மழை பதிவானது. பலத்த மழை: வட மாவட்டங்கள், புதுச்சேரியில் வியாழக்கிழமை ஆங்காங்கே இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நீர்ப்பாசனத் துறைக்கு தனி அமைச்சகம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை**

சிவகங்கையில், தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இச்சங்கத்தின் மாநிலத் தலைவர் ச. மாரிமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், காவிரி வைகை குண்டாறு இணைப்பு கால்வாய் சங்க பொதுச் செயலரும், சிவகங்கை நகராட்சித் தலைவருமான எம். அர்ச்சுனன் சிறப்புரையாற்றினார். பொதுச் செயலர் எல். ஆதிமூலம் அறிக்கை சமர்ப்பித்தார். மாநில துணைச் செயலர்கள் ராமநாதபுரம் ஆர். சுந்தர்ராஜன், கரூர் ஆர். முருகேசன், வைகை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் மு. மதுரைவீரன், சிவகங்கை மாவட்டச் செயலர் ராம. முருகன், கழுகூர் ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், மத்திய-மாநில அரசுகள் வேளாண் துறைக்கென தனி பட்ஜெட் தாக்கல் செய்யவேண்டும். தமிழகத்தில் நீர் வளத்தைப் பெருக்கும் வகையில் கர்நாடக மாநிலத்தில் செயல்படுவது போல் நீர்ப்பாசன துறை அமைச்சகம் தனியாக உருவாக்கிட நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய-மாநில அரசுகள் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 2500 வழங்கி விவசாயிகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முடிவில், மாநிலக் குழு உறுப்பினர் எஸ். செல்லமுத்து சேதுபதி நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பு: தொழில்நுட்பப் பயிற்சி**

சிவகங்கை அருகே சுந்தரநடப்பில் மண் மாதிரி சேகரிப்பு தொழில்நுட்பம் குறித்து, விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இந்த விழிப்பிணர்வு முகாமில், வேளாண் உதவி இயக்குநர் தனபாலன் கலந்துகொண்டு, மண் பரிசோதனை மற்றும் மண்வள அட்டையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். அதேபோல், மண் மாதிரிகள் சேகரிப்பு தொழில்நுட்பம், மண்ணில் காணப்படும் பிரச்னைகள், அதற்குரிய தீர்வுகள் குறித்து காணொலி காட்சி மூலம் மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் பௌஜியாராணி எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் கமலா ராணி, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம், ரசாயன உரங்கள் குறித்து விளக்கினார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை அலுவலர் லயோலா அன்புக்கரசி, நுண்ணூட்ட சத்து குறைவால் பயிர்களில் ஏற்படும் அறிகுறிகள், அதை எவ்வாறு சரிசெய்வது என்பதை காணொலிக் காட்சி மூலம் விளக்கினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை, திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் தம்பித் துரை, உதவி தொழில்நுட்ப மேலாளர் பாண்டீஸ்வரன் ஆகியோர் செய்திருந்தனர். இதில், 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள், வேளாண் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## வீட்டுத் தோட்டம் அமைத்தல் கருத்தரங்கம்

சிவகாசி அரசன்கணேசன் பாலிடெக்னிக்கில் புதன்கிழமை வீட்டுத்தோட்டம் அமைப்பது குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு முதல்வர் எம்.நந்தகுமார் தலைமை வகித்தார். விருதுநகர் மாவட்ட தோட்டக்கலைத் துறை இயக்குநர் பி.ராதாகிருஷ்ணன் சிறப்புரையாற்றினார். இதையடுத்து சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாலிடெக்னிக்கில் அழகுகலை பயிற்சி, தையல் பயிற்சி உள்ளிட்ட இலவச தொழில்பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஏற்பாட்டை பாலிடெக்னிக் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

## 107 நாட்டுக்கோழிப் பண்ணைகள் அமைக்க இலக்கு

விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர் பயன்பெறும் வகையில் அரசு மானியத்துடன் 107 நாட்டுக் கோழிப்பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கால்நடைத்துறை துணை இயக்குநர் கார்த்திக் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் புதன்கிழமை கூறியதாவது: அரசு சிறப்பு கோழிப்பண்ணை வளர்ப்புத் திட்டம் மூலம் இறைச்சி கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 2012-13 முதல் தீவிரமாக இப்பண்ணைத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள்

மற்றும் தொழில் முனைவோர் பயன்பெறும் வகையில் நிகழாண்டில் நாட்டுக்கோழிகள் வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்தவும் உத்தரவிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் 107 நாட்டுக்கோழிப்பண்ணைகள் வைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது.

இதன் மூலம் ரூ.1.29 லட்சம் முதலீட்டில் 250 நாட்டுக்கோழிகள் கொண்ட பண்ணைகள் அமைக்கலாம். அதிலும் விருப்பம் உள்ள பயனாளிகள் சுய மூலதனமாகவோ அல்லது வங்கி நிதி உதவியுடனோ பண்ணை அமைக்க கால்நடைத்துறை மூலம் ஏற்பாடு செய்யப்படும். ஏற்கனவே இறைச்சிக்கோழி வளர்ப்பில் பண்ணைகள் அமைத்துள்ள பயனாளிகள் மீண்டும் பயன்பெற முடியாது.

இத்திட்டத்தில் பயன்பெற கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகள், தனிநபர், தொழில் முனைவோர் ஆகியோர் அந்தந்த பகுதியில் உள்ள கால்நடை மருந்தகங்களில் விண்ணப்பிக்கலாம். இவர்களிடம் நாட்டு கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம் தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர்கள் பெயரிலோ இருக்க வேண்டும்.

இதில், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பு பற்றி விரிவான பயிற்சி அளிக்கப்படும். எனவே இத்திட்டங்களில் பயன்பெற விரும்புவோர் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்கள், கோட்ட அலுவலகம் அல்லது மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து கொள்ளலாம் என்றார்.

**கடல்வள விழிப்புணர்வு கண்காட்சி தொடக்கம்**

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள முகம்மது சதக் தஸ்தகீர் ஆசிரியர் பயிற்சி கல்வியியல் கல்லூரியில், கடல்வளம் பற்றிய விழிப்புணர்வுக் கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் க. நந்தகுமார் புதன்கிழமை தொடக்கி வைத்தார்.

மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளையின் சார்பிலான கடல்வளம் பற்றிய விழிப்புணர்வுக் கண்காட்சி, புதன்கிழமை தொடங்கி வெள்ளிக்கிழமையுடன் நிறைவு பெறுகிறது. கண்காட்சி

தொடக்க விழாவுக்கு, மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளையின் இயக்குநர் டி.எஸ். டாங்கே தலைமை வகித்தார். ராமநாதபுரம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் க. ஜெயக்கண்ணு ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக, அறக்கட்டளையின் சுற்றுச்சூழல் வளர்ச்சி அலுவலர் சாகுல்ஹமீது வரவேற்றார்.

இதில், கண்ணைக் கவரும் வண்ண மீன்கள், சிப்பிகள், சங்குகளின் வகைகள், அழிந்துவரும் அரியவகை கடல்வாழ் உயிரினங்கள், பவளப் பாறைகளின் வகைகள், கடல் பாசிகளின் வகைகள் ஆகியன இடம் பெற்றிருந்தன.

கடல்வாழ் உயிரின ஆராய்ச்சியாளர் செந்தில், மாணவர்களுக்கு விளக்கம் அளித்தார். இக்கண்காட்சியை ஏராளமான பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் பார்வையிட்டனர். பொதுமக்களும் இலவசமாக பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடக் கோரிக்கை**

குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்க வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுமாறு வைகைப் பாசன திட்டக் குழு உறுப்பினர் ரா.பாலசுந்தரமூர்த்தி திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அவரது செய்திக் குறிப்பு: வைகை ஆற்றுப்படுகையில் நூற்றுக்கும் மேற்பட்ட குடிநீராதாரங்கள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள பல்வேறு பகுதிகள் பயனடைகின்றன. தற்சமயம் வைகை ஆற்றுப்படுகையில் நீராதாரம் குறைந்து நீரூற்று 400 அடிக்கும் கீழே போய் விட்டது. எனவே குடிநீர் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. தற்சமயம் வைகை அணையில் வைகை பாசனக்கணக்கில் 1824 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. அந்த தண்ணீரை பெரியாறு

பாசனத்துக்கு வழங்கி வருவது ஏற்கத்தக்கதல்ல. தொடர்ந்து வறட்சியை சந்தித்து வரும் வைகை பாசனப் பகுதிகளுக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

வைகை அணையிலிருந்து குடிநீருக்காக மதுரை உள்ளிட்ட பல்வேறு நகராட்சிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பெரியாறு பாசனக் கணக்கிலிருந்து 1912 மில்லியன் கன அடி தண்ணீரும், வைகைப் பாசனக் கணக்கிலிருந்து 450 மில்லியன் கன அடி தண்ணீருமாக மொத்தம் 2362 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு அரசாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் வைகை ஆற்றுப்படுகையில் உள்ள குடிநீராதாரங்கள் மற்றும் பெரிய கண்மாய் வரையிலான வைகை ஆற்றுப்படுகையில் உள்ள குடிநீராதாரங்கள் பயன்பெறும் வகையிலும், குடிநீர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையிலும் வைகை அணையிலிருந்து உடனடியாக தண்ணீர் திறந்து விட வேண்டும் என முதல்வர் மற்றும் பொதுப் பணித் துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது என அதில் கூறப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் தொழில் நிறுவனங்கள் பங்கேற்க வேண்டும்

பசுமை, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் தொழில் நிறுவனங்கள் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்று, கர்நாடக ஆளுநர் வஜுபாய் வாலா கேட்டுக் கொண்டார்.

பெங்களூரில் புதன்கிழமை வனத் துறை சார்பில் நடைபெற்ற கலந்தாய்வில் அவர் பேசியது:

கர்நாடகத்தில் தொழில் துறை வளர்ச்சிகாக பல ஏக்கர் நிலங்களை அரசு வழங்கி வருகிறது. இதில் தொழில் தொடங்கும் நிறுவனங்கள் அந்தப் பகுதியின் பசுமை, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் ஆர்வமுடன் செயல்பட வேண்டும்.

தொழில் நிறுவன வளாகத்தில் மரக் கன்றுகளை நட்டு பசுமையைப் பாதுகாக்க வேண்டும். வனப்பகுதி அருகே இதுபோன்ற மரங்களை நடுவதன் மூலம் வன விலங்குகள் பாதுகாக்கப்படும்.

உரிமைகளுடன் தங்களது கடமைகளையும் உணர்ந்து அனைவரும் செயல்பட வேண்டும். வனப் பகுதிகளைக் காப்பாற்றுவது அனைவரின் கடமை. வனப் பகுதிகளில் உள்ள மரங்களை வெட்டிக் கடத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

புராதன காலத்திலிருந்தே நிலத்தையும், மரத்தையும் தெய்வமாக வழிபட்டு வருகிறோம். எனவேதான், மரத்தை வெட்டும்போதும், நிலத்தைத் தோண்டும் போதும் பூஜை செய்து வழிபடுகிறோம்.

எனவே, நிலம், மரங்களை தெய்வங்களுக்குரிய இடத்தில் வைத்து வணங்க வேண்டும். வனம், வன விலங்குகளைப் பாதுகாப்பது குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

வனப் பகுதியைப் பாதுகாப்பதில் அரசுடன் இணைந்து பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், வனத் துறை அமைச்சர் ரமாநாத்ராய், வனப் பாதுகாப்பு அதிகாரி வினய்லூத்ரா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

கோவை மாவட்டத்தில் ஆனைமலை, கோட்டூர் பகுதிகளில் அரசின் நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

பொள்ளாச்சி தாலுகாவில் உள்ள ஆனைமலை தொடக்க வேளாண்மை விவசாயக் கூட்டறவுச் சங்கக் கட்டடம், கோட்டூர் தொடக்க வேளாண்மை விவசாயக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்முதல் நிலையத்தில் சன்ன ரக நெல் விலை குவிண்டாலுக்கு ரூ.1,520-ம், சாதாரண ரக நெல் விலை குவிண்டாலுக்கு ரூ.1,460 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தாங்கள் விளைவித்த

நெல்லை நேரடி கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் அறிவுறுத்தியுள்ளார்.

**மாட்டு மலடு நீக்க பரிசோதனை முகாம்**

திருக்கோவிலூர் அருகே ரிஷிவந்தியம் ஆவின் பால் கூட்டுறவு சங்கம் சார்பில் பசுக்களுக்கு மலடு நீக்கப் பரிசோதனை முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக அலுவலர்கள், தமிழ்நாடு கால்நடை பாரமரிப்புத் துறையினர் இணைந்து முகாமை நடத்தினர்.

முகாமிற்கு ஊராட்சித் தலைவர் மு.அமுதமொழி தலைமை வகித்தார். பால் கூட்டுறவு வங்கிச் செயலர் சி.நாராயணசாமி வரவேற்றார்.

முகாமில் கள்ளக்குறிச்சி கோட்ட கால்நடை உதவி இயக்குநர் கே.குபேந்திரன் சிகிச்சைக்கான ஆலோசனைகள், செய்முறைகள் பற்றி எடுத்துக் கூறினார்.கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பேராசிரியர் குலசேகரன், மருத்துவர்கள் பாலசுப்பிரமணியன், சந்திரன், பிரேமலதா, துணை இயக்குநர் ராமமூர்த்தி, உதவி இயக்குநர் குரு ஆகியோர் 200-க்கும் மேற்பட்ட பசுமாடுகளை பரிசோதித்தனர்.

**காரைக்காலை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும்: முதல்வரிடம் விவசாயிகள் மனு**

காரைக்கால் பகுதியில் மழையின்றி, காவிரி நீரும் கிடைக்காமல் விவசாயம் பாதித்துள்ளதால் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று விவசாயிகள் முதல்வரிடம் கோரிக்கை விடுத்தனர்.

காரைக்கால் பிரதேச விவசாயிகள் நலச் சங்கத்தினர், தலைவர் பி.ராஜேந்திரன், பொதுச் செயலாளர் பி.திருநாராயணன், பொருளாளர் ஆர்.கேசவன் உள்ளிட்டோர் தலைமையில், புதன்கிழமை புதுவை சட்டப்பேரவை அலுவலகத்துக்கு வந்தனர்.

இவர்கள், முதல்வர் என்.ரங்கசாமியை சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

அந்த மனு விவரம்: காரைக்கால் மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. தாமதமாக திறந்துவிடப்பட்ட காவிரிநீர் கடைமடை பகுதியான காரைக்காலுக்கு சரியாக கிடைக்கவில்லை.

இதனால், பெரும்பாலான விவசாயிகள் நேரடி நெல் விதைப்பிற்கு இறங்கினர். அவர்களுக்கும், மழையின்றி இயற்கை முகம் காட்டவில்லை. காவிரி நீரும் கிடைக்கவில்லை. சம்பா நடவுக்கு விடப்பட்ட நாற்றுகள் தண்ணீரின்றி காய்ந்துபோயுள்ளது.

இதனால், காரைக்காலை வறட்சியால் பாதித்த மாவட்டமாக அறிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணமாக வழங்க வேண்டும். வறட்சியை சமாளிக்க, சரிவர இயங்காமல் உள்ள ஆழ்குழாய்க் கிணறுகளை இயங்க வைக்க வேண்டும். பாசிக் மூலம் இயங்கும் ஆழ்குழாய்க் கிணறுகளுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும்.வறட்சியால், ஏரி, குளங்களிலிருந்து தாற்காலிகமாக தண்ணீர் எடுத்து பயன்படுத்த மோட்டார் செட்களுக்கு தாற்காலிக மின்சாரம் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

விவசாயிகள் புதிய மின்மோட்டார் வாங்குவதற்கும், டீசல் என்ஜின் வாங்குவதற்கும், டீசல் என்ஜின் வைத்துள்ளவர்களுக்கும் 75 சதவீதம் மானியமும், மானிய டீசலும் வழங்க வேண்டும்.

நேரடி நெல் விதைப்பிற்கு குறுகிய கால நெல் விதைகளை பாசிக் மூலம் 75 சதவீதம் மானியத்தில் வழங்க வேண்டும். கன்று, கறவை மாடுகளுக்கு இலவச தீவனம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

மனுவைப் பெற்ற முதல்வர் ரங்கசாமி நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

## 22% வரை ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வலியுறுத்தல்

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஜனவரி இறுதி வரை 22 சதம் ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கு ஏ.ஐ.டி.யு.சி. வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஏஐடியூசி தொழில் சங்க மாநில பொதுச் செயலர் சி. சந்திரகுமார் தெரிவித்திருப்பது:

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யும்போது 17 சதம் ஈரப்பதத்துக்குள் உள்ள நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது.

ஈரப்பதமுள்ள நெல் விற்பனைக்கு வருவதால் கொள்முதல் செய்ய இயலாமல் பெரும் பிரச்னையாக உருவாகியுள்ளது. நேரடியாக இந்தப் பணியில் ஈடுபடும் நெல் கொள்முதல் பணியாளர்களும், சுமை தூக்கும் தொழிலாளர்களும் தேவையற்ற பிரச்னைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள் கொண்ட குழு வந்து ஆய்வு செய்து அறிக்கை தந்த பிறகு ஈரப்பதத்தை தளர்த்துவது என்பது நடைமுறையில் உள்ளது. இது காலதாமதத்தை உருவாக்குகிறது.

எனவே, அக்டோபர் முதல் ஜனவரி இறுதி வரை 22 சதம் ஈரப்பதம் உள்ள கொள்முதல் செய்யும் முறையை நிரந்தரமாக அமல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 19 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை காலை நொடிக்கு 19 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

கர்நாடக மாநிலத்தில் காவிரி ஆற்றின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருவதால், காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 7,299 கன அடியாக இருந்த நீர்வரத்து, புதன்கிழமை காலை நொடிக்கு 18,899 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை 68.72 அடியாக இருந்தது, புதன்கிழமை காலை 69.57 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம்

சுமார் ஓர் அடி வரை உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 33.32. டி.எம்.சி.

காவிரி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக ஏராளமான கால்நடைகள் வெள்ளநீரில் அடித்து வரப்பட்டன. கோட்டையூர் பரிசல் துறை பகுதியில் இரண்டு மாடுகளும் நான்கு ஆடுகளும் கரை ஒதுங்கின. பின்னர், அவை மீண்டும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. காவிரிக் கரையில் அமைக்கப்பட்டுள்ள பட்டிகளில் வெள்ளம் புகுந்ததால், கால்நடைகள் அடித்து வரப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் ஆயிரத்து 110 எக்டேர் பரப்பளவில் நேரடி நெல் விதைப்பு கலெக்டர் கணேஷ் தகவல்



ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் ஆயிரத்து 110 எக்டேர் பரப்பளவில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் கணேஷ் கூறினார்.

கலெக்டர் ஆய்வு

ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் சார்பில் எந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களை மாவட்ட கலெக்டர் கணேஷ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:-
தமிழக அரசு நெல் உற்பத்தியை அதிகரிக்க செய்யும் வகையில் வேளாண்மைத்துறையின் மூலம் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் எந்திரம் மூலம் விவசாயிகள் அரசு மானியத்துடன் நேரடி நெல் விதைப்பு செய்ய உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆவுடையார் கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத்துறையின் மூலம் கீழச்சேரி பகுதியில் எந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்கள் மற்றும் கிடங்கிவயலில் பயிரிடப்பட்ட நடவுகளை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.
அதிகாரிகளுக்கு உத்தரவு

இந்த ஆய்வின் போது வயல்களில் பயிரிடப்பட்ட நெல்ரகம், பயன்படுத்தும் உரங்கள், பயிர்களின் வளர்ச்சி, நீர்ப்பாய்ச்சும் முறை போன்றவற்றை விவசாயிகளிடம் கேட்டறிந்தும், பூச்சி தாக்குதலிலிருந்து நெற்பயிர்களை காப்பாற்ற மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. மேலும், நேரடி நெல் விதைப்பின் மூலம் பயிரிடப்பட்ட பயிர்களை சிறப்பாக பராமரித்து அதிக மகசூலைப்பெற விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் விவசாயிகளுக்கு தேவையான அனைத்து வேளாண் ஆலோசனைகளையும் வேளாண் அதிகாரிகள் தொடர்ந்து வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நேரடி நெல் விதைப்பு

தமிழக அரசு ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் எந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு செய்வதற்காக வேளாண்மைத்துறைக்கு 2015-16-ம் ஆண்டிற்கு ஆயிரத்து 600 எக்டேர் பரப்பளவு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இதில் ஆயிரத்து 110 எக்டேர் பரப்பளவு இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் விரைவில் இலக்கு முழுவதையும் எட்டுவதற்கு

உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளும் தங்களது வயல்களில் எந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பு மேற்கொண்டு அதிக மகசூலினைப்பெற்று பயன்பெற வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

உரக்கிடங்கு ஆய்வு

முன்னதாக கலெக்டர் கணேஷ் ஆவுடையார்கோவில் உரக்கிடங்கினை பார்வையிட்டு உர இருப்பினை ஆய்வு செய்தார். மேலும், விவசாயிகளுக்கு தேவையான உரங்களை விரைவாக வழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.இந்த ஆய்வின்போது ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் அலுவலர் செல்வசுவாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வராஜ், உதவி வேளாண் அலுவலர் கோபாலகிருஷ்ணன், ஒன்றியக்குழு உறுப்பினர் நரேந்திரஜோதி, ஊராட்சி மன்ற தலைவர்கள் ராமநாதன், சுப்பிரமணியன், ஞானசிவம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தேனீ வளர்ப்பு பயிற்சி பெற்ற நிலையில் வங்கிக்கடன் கிடைக்காமல் பழங்குடி மக்கள் தவிப்பு



தேனி, கடமலைக்குண்டு, வருசநாடு பகுதிகளில் தேனீ வளர்ப்பு பயிற்சி பெற்ற பழங்குடியின மக்கள் வங்கிக்கடன் கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.

<u>தேனீ வளர்ப்பு பயிற்சி</u>

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு மற்றும் வருசநாடு பகுதிகளில் பல்வேறு கிராமங்களில் மலைவாழ் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். இந்த மக்கள் வாழ்வாதாரம் இன்றி பரிதவித்து வருகின்றனர். இன்னமும் சிலர் மலைகளுக்கு சென்று தேன் சேகரித்தும், வாசனை பொருட்கள், மூலிகைகள் சேகரித்தும் விற்பனை செய்து வருகின்றனர்.இந்த மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தவும், பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் புதுவாழ்வு திட்டம் சார்பில் தேனீ வளர்ப்பு தொடர்பான சிறப்பு பயிற்சிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு அளிக்கப்பட்டன. பழங்குடியின மக்களை தேர்வு செய்து அவர்களுக்கு சிறப்பு பயிற்சியாக இந்த பயிற்சி அளிக்கப்பட்டது.

<u>கடன் கிடைக்காமல் தவிப்பு</u>

பயிற்சி பெற்ற மக்களுக்கு வங்கிக்கடன் வேண்டி விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டன. ஆனால், இவர்களின் விண்ணப்பங்கள் வங்கிகளில் நிராகரிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. பயிற்சி பெற்றும், வங்கிக்கடன் கிடைக்காமல் மக்கள் தவித்து வருகின்றனர்.

இதுகுறித்து வருசநாடு பகுதியை சேர்ந்த பழங்குடியின மக்கள் கூறுகையில், ‘எங்களுக்கு தேனீ வளர்ப்பு பயிற்சி அளித்தார்கள். ஆனால் தேனீ வளர்ப்பு பெட்டிகள் வாங்குவதற்கு பணம் கிடையாது. அதற்காக தான் வங்கியில் கடன் கேட்டு விண்ணப்பித்தோம். ஆனால், குறைந்த

அளவிலான கடன் என்பதால் எங்களுடைய மனுக்களை நிராகரித்து விட்டனர். மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து எங்களுக்கு வங்கிக்கடன் பெற்றுக் கொடுக்க வேண்டும்' என்று தெரிவித்தனர்.

## விளைச்சல் அதிகரிப்பால் விலை குறைந்த இளநீர் திருப்பூரில் ரூ.15–க்கு கூவி, கூவி விற்பனை




சுட்டெரிக்கும் வெயிலில் இருந்து தற்காத்துக்கொள்ள குளிர்ச்சியான ஆகாரங்களை சாப்பிட்டு உடல் சூட்டை தணித்துக்கொள்வது வழக்கம். வெயில் கொளுத்துகிறது என்ற நினைத்து வீதியில் நடமாடாமல் யாரும் இருக்க முடியாது. வெயிலையும் சமாளித்து உடலையும் கவனித்துக் கொள்வதற்காக மோர், இளநீர், சர்பத் போன்ற குளிர்ச்சியான ஆகாரங்களை உள்ளே தள்ளி பொதுமக்கள் ஆசுவாசப்படுத்தி வருகிறார்கள். இதில் வெயில் கொடுமையில் இருந்து தப்பிக்க அனைவரும் நாடுவது இளநீரைத்தான்.

திருப்பூர் மாநகரில் பிரதான ரோட்டோரங்களில் இளநீர் கடைகள் அமைத்து வியாபாரம் செய்து வருகிறார்கள். உடுமலை, அவினாசி, பொள்ளாச்சி பகுதிகளில் இருந்து இளநீர் கொண்டு வந்து இங்கு விற்பனை செய்கிறார்கள். ஒரு இளநீர் ரூ.25 முதல் ரூ.30 வரை விற்கப்பட்டு வருகிறது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இளநீர்

குடிப்பதை அதிகம் விரும்புகிறார்கள். ரூ.30–க்கு விற்பனை செய்தாலும் இளநீர் விற்பனை நன்றாக நடந்து வந்தது.

ரூ.15–க்கு விற்கும் இளநீர்

இந்தநிலையில் கடந்த ஒரு மாதமாக உடுமலை, அவினாசி பகுதிகளில் உள்ள தென்னந்தோப்புகளில் இருந்து நேரடியாக இளநீரை வேன், ஆட்டோக்களில் ஏற்றி திருப்பூர் மாநகருக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். அதாவது ஒரு இளநீரை ரூ.10 முதல் ரூ.15 வரை விலை குறைத்து விற்பனை செய்கிறார்கள். ரூ.30–க்கு இளநீர் வாங்கிக்குடித்து வந்த திருப்பூர் வாசிகளுக்கு பாதி விலையில் இளநீர் கிடைப்பதால் ஆர்வமுடனும் மகிழ்ச்சியுடனும் வாங்கி பருகி வருகிறார்கள். திருப்பூர் மாநகரில் பெரும்பாலான இடங்களில் வேன், ஆட்டோக்களில் குலை, குலையாக இளநீர் காய்களை ஏற்றிக்கொண்டு வந்து விற்பனை செய்கிறார்கள். நேரடியாக கொண்டு வந்து விற்பனை செய்வதால் விலையை குறைத்து விற்பனை செய்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து இளநீர் வியாபாரிகளிடம் கேட்டபோது, “உடுமலை, பொள்ளாச்சி, அவினாசி பகுதிகளில் இளநீர் விளைச்சல் தற்போது அதிகமாக உள்ளது. மொத்த வியாபாரிகளிடம் கொடுப்பதை விட, ஆட்டோ, வேன்களில் மொத்தமாக கொண்டு வந்து ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்து வருகிறோம். விலையை குறைத்து கொடுப்பதால் இளநீர் விரைவில் விற்று தீர்ந்து விடுகிறது“ என்றனர்.

டீ விலை ரூ.5

இதேபோல் திருப்பூர் மாநகரில் உள்ள ஓட்டல், பேக்கரிகளில் ஒரு டீ ரூ.10–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தநிலையில், கடந்த 2 வாரங்களாக ஒரு டீயின் விலை ரூ.5 வரை குறைந்து விட்டது. பெரும்பாலான கடைகளில் ரூ.5–க்கு டீ விற்பனை செய்வதால் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக உள்ளது. போட்டி நிறைந்த வியாபாரத்தில் பொதுமக்களை ஈர்ப்பதற்காக டீயின் விலையை பாதியாக குறைத்து மக்களை தங்கள் பக்கம் இந்த ஓட்டல், பேக்கரி உரிமையாளர்கள் இழுத்து வருகிறார்கள். இளநீர், டீ விலை பாதியாக குறைக்கப்பட்டுள்ளதால் திருப்பூர் வாசிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## காலாவதியான உணவு பொருட்கள் அழிப்பு உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் நடவடிக்கை



பந்தலூர்,

பந்தலூர் பஜாரில் காலாவதியான உணவு பொருட்களை மாவட்ட உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் பறிமுதல் செய்து அழித்தனர்.

<u>அதிரடி சோதனை</u>

பந்தலூர் பஜார் பகுதியில் உள்ள கடைகளில் காலாவதியான உணவு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக மாவட்ட கலெக்டர் சங்கருக்கு பல்வேறு புகார்கள் வந்தன. இதையொட்டி மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி டாக்டர் ரவி தலைமையிலான குழுவினர் பந்தலூர் பஜார் பகுதியில் நேற்று அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது காலாவதியான குளிர்பானங்கள், மிட்டாய், மிக்சர், முறுக்கு, நொறுக்கு தீனிவகைகள் விற்பனை செய்வது கண்டறியப்பட்டது. அவற்றை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும் காலாவதியான குளிர்பானங்களை கீழே ஊற்றினர்.

<u>காலாவதியான உணவு பொருட்கள் அழிப்பு</u>

இதையடுத்து, மளிகை கடைகளில் ஆய்வு செய்த உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் அங்கு உள்ள உணவுப்பொருட்களில் காலாவதியானதை பறிமுதல் செய்து அழித்தனர். மேலும் உணவு பொருட்கள், அழகு சாதனம் மற்றும் ரசாயனம் சார்ந்த பொருட்களை தனித்தனியாக அடுக்கி வைக்க அறிவுறுத்தினர். இதுகுறித்து உணவு பாதுகாப்பு அதிகாரி டாக்டர் ரவி கூறியதாவது:–

காலாவதியான பொருட்களை விற்பனை செய்வதால் வாந்தி, பேதி, வயிறு சம்பந்தமான பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே உணவு பொருட்களையும் குளிர்பானங்களையும் மொத்த விற்பனையாளர்களிடம் வாங்கும்போதே தயாரிப்பு மற்றும் காலாவதி தேதி உள்ளிட்ட தகவல்கள் கேட்டு பெற வேண்டும்.

<u>நோய் பரவும் அபாயம்</u>

மீன்கள் மற்றும் பழங்களை விற்பனைக்கு வைக்கப்படும் போது கொசுக்கள் மற்றும் ஈக்கள் அமராத வகையில் வலைகள் போட்டு மூடி வைக்க வேண்டும். அழுகிய பழங்கள் மற்றும் மீன்களை சாப்பிடுவதால் பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் சுகாதாரமற்ற உணவு பொருட்களை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## ‘தினத்தந்தி’ செய்தி எதிரொலி: காவயல் தடுப்பணை தூர்வாரப்பட்டது



பந்தலூர்,

‘தினத்தந்தி’ செய்தி எதிரொலி காரணமாக காவயல் தடுப்பணை ரூ.5 லட்சம் செலவில் தூர்வாரப்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

<u>தடுப்பணை</u>

பந்தலூர் தாலுகா மழவன்சேரம்பாடி அருகே காவயல் பகுதியில் ஏராளமான தோட்ட தொழிலாளர்கள் குடியிருந்து வருகின்றனர். இப்பகுதியில் தடுப்பணை அமைக்க வேண்டும் என்று தோட்ட தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இதையொட்டி அந்த பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு தடுப்பணை கட்டப்பட்டது. இதனை அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் இந்த தடுப்பணை சரிவர பராமரிக்காததால் தடுப்பணையை சுற்றி முட்புதர்கள் வளர்ந்து உள்ளது. இதனால் தடுப்பணையை பயன்படுத்த முடியாமல் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வந்தனர். இது குறித்து ‘தினத்தந்தி’யில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு செய்தி வெளியிடப்பட்டது.

ரூ.5 லட்சம் செலவில் தூர்வாரப்பட்டது

இதையடுத்து, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மணிகண்டன், வட்டார வளர்ச்சி அலுவலர் சாமிவேல், சேரங்கோடு ஊராட்சி மன்ற தலைவர் ஜெயராமன், பொறியாளர் மணிகண்டன், பணி மேற்பார்வையாளர் அப்பாதுரை, ஊராட்சி செயலாளர் சஜீத் ஆகியோர் காவயல் தடுப்பணையை பார்வையிட்டனர். பிறகு ரூ.5 லட்சம் செலவில் தடுப்பணையை தூர் வாரி சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதனால் தடுப்பணையில் நீர்வரத்து அதிகரித்து தண்ணீர் நிரம்பி காணப்படுகிறது. இதனால் இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## தொடர்மழை காரணமாக கொடைக்கானலில் ஏரிகள், அணைகள் நிரம்புகின்றன



கொடைக்கானல்,

கொடைக்கானல் பகுதியில் தொடர்மழை காரணமாக ஏரிகள், அணைகள் நிரம்புகின்றன. அங்குள்ள நீர்வீழ்ச்சிகளிலும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

<u>வெள்ளி நீர்வீழ்ச்சி</u>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பகுதிகளில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால், அங்குள்ள ஏரிகளின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இதற்கிடையே கடந்த மாதம் 23–ந் தேதி முதல் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் அடிக்கடி மழை பெய்து வருகிறது.

இதன்படி நேற்று காலை வரை அப்சர்வேட்டரி பகுதியில் 27 செ.மீட்டரும், போட்கிளப் பகுதியில் 28.8 செ.மீட்டரும் மழை பதிவாகி உள்ளது. நேற்று அதிகாலை முதல் மழை குறைந்திருந்த நிலையில் பிற்பகல் நேரத்தில் மீண்டும் லேசான சாரல்மழை பெய்தது. இந்த தொடர் மழையின் காரணமாக கொடைக்கானல் நகரில் உள்ள நட்சத்திர ஏரி முழுமையாக நிரம்பி உள்ளது.

தற்போது அதில் இருந்து உபரிநீர் அதிக அளவில் வெளியேற்றப்படுகிறது. இந்த தண்ணீர் வெள்ளிநீர்வீழ்ச்சியில் ஆர்ப்பரித்து கொட்டும் நிலையில், அங்கிருந்து பழனி நகருக்கு குடிநீர் வழங்கும் பாலாறு–பொருந்தலாறு அணைப்பகுதிக்கு சென்றடைகிறது.

<u>விவசாய பணிகள்</u>

அதேபோல பெரியகுளம் நகருக்கு குடிநீர் வழங்கும் பேரிஜம் ஏரியிலும் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. அத்துடன் கொடைக்கானல் நகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் 20 அடி உயர பழைய அணையில்

தற்போது 14 அடி உயரத்திற்கு தண்ணீர் உள்ளது. அதேபோல புதிய அணையில் 23.7 அடி உயரத்திற்கு தண்ணீர் உள்ளது.

மேலும் இந்த 2 அணைகளுக்கும் தற்போது தண்ணீர் வரத்து உள்ளதால், அவற்றின் நீர்மட்டம் மேலும் உயருவதற்கு வாய்ப்பு உள்ளது. இதுமட்டுமின்றி தொடர்மழை காரணமாக கொடைக்கானல் தாலுகாவில் பல்வேறு கிராமங்களில் உள்ள சிறு குளங்களும் நிரம்பி உள்ளன.

இதனால் அந்த பகுதிகளில் உள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் தங்கள் விவசாய பணிகளை தொடங்கி உள்ளனர். அத்துடன் அந்த பகுதிகளில் நீடித்து வந்த குடிநீர் தட்டுப்பாடு பிரச்சினையும் முடிவுக்கு வந்துள்ளது.

மரங்கள் விழுகின்றன

இந்த மழையின் காரணமாக இப்பகுதியில் உள்ள வெள்ளி நீர்வீழ்ச்சி மற்றும் பாம்பார், பியர்சோழா நீர்வீழ்ச்சிகளிலும் அதிக அளவில் தண்ணீர் வந்த வண்ணம் உள்ளது. இதனை சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் ரசித்து செல்கின்றனர். அதுமட்டுமின்றி மழை மற்றும் பலத்த காற்றின் காரணமாக சாலையில் அடிக்கடி மரங்கள் சரிந்து விழுகின்றன. அவற்றை நெடுஞ்சாலைத்துறையினர் உடனடியாக அகற்றி வருகின்றனர்.

## பெரம்பலூரில் தொடர் மழையால் ஏரி-குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு விவசாய பணிகள் தீவிரம்



பெரம்பலூரில் தொடர் மழையால் ஏரி-குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இதனால் விவசாய பணிகள் தீவிரமடைந்தது. பலத்த மழை

பெரம்பலூர் நகரிலும், மாவட்டத்தின் கிராமப்புற பகுதிகளிலும் கடந்த 10 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. பகலில் வெயில் கடுமையாக உள்ளது. மாலை நேரத்தில் இதமான தட்பவெப்பநிலையும், அதனைத்தொடர்ந்து இரவு நேரத்தில் பலத்தமழையும் பெய்துவருகிறது. நீர்வரத்து அதிகரிப்பு

ஓடைகள், நீர்வரத்து வாய்க்கால்களின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளில் மழைநீர் நிரம்பி உள்ளது. பெரம்பலூர் புறநகரில் உள்ள பெரம்பலூர் நகருக்கு குடிநீர் வழங்கும் 6 கிணறுகள் அமைந்துள்ள உப்புஓடை நிரம்பி வருகிறது. செட்டிக்குளம், செஞ்சேரி, குரும்பலூர், பாளையம் பகுதிகளில் உள்ள குளங்கள், நீர்நிலைகளும் நிரம்பி வழிகிறது. வடகிழக்கு பருவமழைக்கு முன்னதாக பெரம்பலூர் மாவட்டத்தில் மழைபெய்துவருவதால் விவசாயிகள் தங்களது வயல்களில் உழவாரப்பணிகளை முடுக்கிவிட்டுள்ளனர். மேலும் பெரம்பலூர் நகரில் கடந்த 5 ஆண்டுகளாக நிலவி வந்த கடும் வறட்சி நிலை மாறிஉள்ளது. ஆழ்துளை கிணறுகளின் ஊற்று அதிகரிப்பால் பொதுமக்கள் தண்ணீர்

தட்டுப்பாட்டில் இருந்து சற்றே விடுபட்டுள்ளனர்.

மழையளவு விவரம்

நேற்று காலை 8 மணி நிலவரப்படி பெரம்பலூர் மாவட்டத்தில் பதிவான மழைஅளவு விவரம்: பெரம்பலூர்- 57மி.மீ, வேப்பந்தட்டை- 33மி.மீ, தழுதாழை- 57 மி.மீ. பாடாலூர்- 3மி.மீ,செட்டிக்குளம்- 1 மி.மீ, மொத்தம்- 151 மி.மீ. சராசரியாக 30.2 மி.மீ. மழை பெய்துள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## சூறாவளியை கண்டறியும் ராக்கெட்டை வெற்றிகரமாக ஏவியது சீனா

சூறாவளியை மிகத் துல்லியமாக கண்டறியும் உதவும் ராக்கெட்டை சீனா வெற்றிகரமாக ஏவியுள்ளது.

அந்நாட்டின் தென்பகுதியை நேற்று மிஜிகா சூறாவளி தாக்கி யது. அப்போது இந்த ராக்கெட் ஏவப்பட்டது. அதில் இருந்து ரேடி யோசோன்ட் எனப்படும் வானி லையை கண்காணிக்கும் கருவிகள் வானில் விடப்பட்டன.

இவை சூறாவளியை மிகத்துல்லியமாக கணித்து தரைக்கட்டுப்பாட்டு மையத்துக்கு தகவல் அனுப்பின. அதன் அடிப்படையில் உரிய முன் னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சீனா இப்போது முதல் முறையாக சூறாவளியை ராக்கெட் மூலம் கண்காணிக்கும் தொழில் நுட்பத்தை வெற்றிகரமாக பரி சோதித்துள்ளது. சீனாவில் ராக்கெட் தொழில்நுட்பத்தில் இது முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது.

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு: நீர்மட்டம் 70 அடியை தாண்டியது



மேட்டூர், அக்.8

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர் பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் காவிரி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஒகேனக்கல் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

காவிரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் அருவிகளில் குளிக்க இன்று 3–வது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளது.கர்நாடக – தமிழக எல்லை பகுதியாக பிலுகுண்டுலுவில் நேற்று மாலை சுமார் 23 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. இன்று காலை சற்று குறைந்து 20 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் மேட்டூர் அணைக்கு 7 ஆயிரத்து 299 கன அடி வந்து கொண்டிருந்த தண்ணீர் வரத்து நேற்று காலை 18 ஆயிரத்து 899 கன அடியாக அதிகரித்தது. இன்று காலை இது 20 ஆயிரத்து 970 கனஅடியாக உயர்ந்துள்ளது.நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 68.72 அடியாக இருந்தது. நேற்று காலை இது 69.57 அடியாக உயர்ந்தது. இன்று காலை நிலவரப்படி நீர்மட்டம் 70.60 அடியாக உள்ளது.

கடந்த 2 நாட்களில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனம் மற்றும் கால்வாய் பாசனத்துக்காக 10 ஆயிரத்து 600 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவைவிட நீர்வரத்து அதிகமாக உள்ளதால் நீர்மட்டம் மீண்டும் உயர தொடங்கி உள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 70 அடியை தாண்டியதால் அணையில் வெளியே தெரிந்த நந்தி சிலை மற்றும் கிறிஸ்தவ ஆலை கோபுரம் ஆகியன தற்போது தண்ணீரில் மூழ்கி உள்ளது.

## தொடர் மழை நீடிப்பு: 117 அடியை எட்டிய பெரியாறு அணை நீர்மட்டம்



கம்பம், அக்.8–

தொடர் மழை காரணமாக முல்லைபெரியாறு அணை நீர்மட்டம் 117 அடியை எட்டியுள்ளது.

வடகிழக்கு பருவமழை இன்னும் தொடங்காத நிலையிலும் தேனி மாவட்டத்திலும், முல்லைபெரியாறு அணையின் நீர்பிடிப்பு பகுதியிலும் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக தொடர் மழை பெய்தது. இதனால் பெரியாறு மற்றும் வைகை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. 50

அடி வரை நெருங்கிய வைகை அணை நீர்மட்டம் அதன்பிறகு கூடுதல் தண்ணீர் திறப்பின் காரணமாக படிப்படியாக குறைந்து 49 அடிக்கும் கீழ் குறைந்தது.

நேற்று நீர்பிடிப்பு பகுதி உள்பட எங்கும் மழை இல்லை. இருப்பினும் வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக 960 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

பெரியாறு அணை நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 116.90 அடியாக உள்ளது. நீர்வரத்து 723 கனஅடி, திறப்பு 511 கனஅடி. நீர்இருப்பு 2069 மி.கனஅடி. வைகை அணை நீர்மட்டம் 48.59 அடி. வரத்து 394 கனஅடி, திறப்பு 960 கனஅடி, இருப்பு 1814 மி.கனஅடி. மஞ்சளாறு அணை நீர்மட்டம் 55.80 அடி, வரத்து 72 கனஅடி. சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 97.25 அடி, வரத்து மற்றும் திறப்பு 3 கனஅடி.

தினகரன்

**வேலூரில் வெங்காயம் கிலோ ரூ.30**



வேலூர்: லாரி ஸ்டிரைக் காரணமாக காய்கறி மற்றும் மளிகை பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது. லாரி போக்குவரத்து தொடங்கியதால் விலையும் படிப்படியாக குறைந்தது. சாதாரணமாகவே உச்ச விலையில் விற்கப்படும் வெங்காயம் லாரிகள் ஸ்டிரைக் காரணமாக வெங்காயம் விலை கிலோ ரூ.80 முதல் ரூ.85 வரை விற்கப்பட்டது. இதேபோல் அனைத்து காய்கறிகளின் விலையும் உச்சத்தை தொட்டது. வேலூரில் நேற்று வெங்காயம் கிலோ ரூ.20 முதல் 30 வரை விற்கப்பட்டது. மற்ற காய்கறிகளின் விலையும் வெகுவாக குறைந்துள்ளது.

**சமுத்திரத்தில் நெல் பயிருக்கான விதை கிராம பயிற்சி திட்ட முகாம் திரளான விவசாயிகள் பங்கேற்பு**

மணப்பாறை, : மணப்பாறை அருகே உள்ள சமுத்திரத்தில் அட்மா திட்டத்தின் கிழ் நெல் பயிருக்கான விதை கிராம பயிற்சித்திட்ட முகாம் நடந்தது. இந்த பயிற்சிக்கு ஊராட்சித் தலைவர் சந்திரகுமார் தலைமை வகித்தார். மணப்பாறை வேளாண் உதவி இயக்குநர் சேட்முகமது விவசாயிகளை வரவேற்று பேசுகையில், நடப்பு சம்பா பருவத்தில் விவசாயிகள் இயந்திர முறையில் நடவு செய்து அதிக மகசூல் அடைந்திடவும் சம்பா பருவத்திற்கேற்ற நெல் ரகங்கள் குறித்தும்,

குறிப்பாக கோ(ஆர்)50 நெல் ரகம் ,கோ43 ரகத்திற்கு மாற்று ரகமாக அதிக விளைச்சல் தரும் புதிய ரகமாகும். விவசாயிகள் அனைவரும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ் ஒரு கிலோ விதைக்கு ரூ10 வீதம் மானியத்தில் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொண்டார். சிறுகமணி வேளாண் அறிவியல் மையத்தின் பூச்சியியல் பேராசிரி–ுயர் டாக்டர் ரவி நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் கடைப்பிடித்தல் மற்றும் எலிக்கட்டுப்பாடு முறைகள் குறித்தும் எடுத்துக்கூறினார்.

விவசாயிகளின் சந்தேகங்களுக்கும், தொழில்நுட்ப விளக்கமளித்தார். விதைச்சான்று அலுவலர் ரம்யாதேவி, அதிக மகசூலுக்கு அடிப்படை ஆதாரமாக விளங்குவது சான்று பெற்ற விதையாகும் என்பதையும் நெல்நடவு வயலில் கலவன்கள் நீக்கி, விதைத்தரம் பராமரிப்பது குறித்தும் பேசினார். வேளாண் அலுவலர் காசிவிஸ்வநாதன், வேளாண் துறையில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும் மானியதிட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப விளக்கங்கள் விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். இப்பயிற்சியில் விதை நேர்த்தி செய்வதால் விதை மூலம் பரவும் குலைநோய், இலைக்கருகல் நோயினை வருமுன்னர் கட்டுப்படுத்தலாம் என்பதையும் இது சம்மந்தமாக நெல் விதை நேர்த்தியும் விவசாயிகளுக்குச் செயல்விளக்கமும் அட்மா திட்ட அலுவலர் சந்தனமேரி மற்றும் உதவி வேளாண் அலுவலர் விஜயரத்தினம் செய்து காண்பித்தனர்.

இந்த பயிற்சியில் சமுத்திரம் மரவனூர் உட்பட பல்வேறு பகுதிகளை சோந்த விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். உதவி விதை அலுவலர் அர்ஜுணன் நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் சிவக்குமார், கணேசன், மோகன்ராஜ், வேலு ஆகியோர் செய்திருந்தனர்.

**நத்தத்தில் பலத்த மழை**

நத்தம், : நத்தத்தில் நேற்று பெய்த மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.நத்தத்தில் கடந்த சில நாட்களாக வெப்பத்தின் தாக்கம் அதிகம் இருந்தாலும் மாலையில் கருமேகங்கள் ஒன்று கூடும். ஆனால் சாரல் மழையாக பெய்யும். இந்நிலையில் நேற்று காலை முதலே வெப்பத்தின் தாக்கம் அதிகம் காணப்பட்டது. திடீரென பலத்த மழை பெய்தது. இந்த மழை மாலை 5.30க்கு துவங்கி 6.10 வரை சுமார் 40 நிமிடம் பெய்தது.இதனால் சாலைகளில் மழைநீர் புரண்டு ஓடியது. மேலும் குளிர்ந்த காற்று வீசத் தொடங்கி வெப்பத்தை தணித்தது. இதனால் விவசாயிகளும் பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர்.

**வெங்காயம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

மயிலம், : மயிலம் பகுதியில் உள்ள விவசாயிகள், வெங்காயம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.சந்தையில் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரை விற்கப்பட்டு வந்த வெங்காயத்தை சில்லரை வியாபாரிகள் ரூ.40, ரூ.60 என தரம் பிரித்து விற்பனை செய்து வருகின்றனர். வெங்காயத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதால் மயிலம், கொல்லியங்குணம், எடப்பாளையம், தழுதாளி, பாதிராப்புலியூர், செண்டூர், வீடூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் அதிகளவில் வெங்காயம் பயிரிட்டு வருகின்றனர்.

இங்கு அறுவடை செய்யப்படும் வெங்காயம், கோயம்பேடு மார்க்கெட்டிற்கு லாரிகளில் அனுப்பி வைப்பதோடு மட்டுமல்லாமல், தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் தற்காலிக கடைகளை அவர்களே அமைத்து விற்பனை யில் ஈடுபடுகின்றனர். அவைகளை கிலோ ரூ.25க்கு விற்பனை செய்வதால் நெடுஞ்சாலைகளில் செல்வோர் விலை குறைவாக உள்ளதே என அதிகளவில் வாங்கி செல்கின்றனர். மேலும் சில வியாபாரிகள் மினி லாரிகள், இரு சக்கர வாகனங்களில் திண்டிவனம்,

செஞ்சி, விழுப்புரம் ஆகிய பகுதிகளுக்கு சென்று விற்பனை செய்து வருகின்றனர்.

**திருப்புத்தூரில் திடீர் மழை பொதுமக்கள் மகிழ்ச்சி**

திருப்புத்தூர், : தமிழகம் முழுவதும் தற்போது ஏப்ரல், மே மாதங்களைப் போல வெயிலின் தாக்கம் அதிகரித்து பொதுமக்களை வாட்டி வந்தது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக வெப்பச்சலனம் காரணமாக பரவலாக மழை பெய்து வருகிறது. சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூரில் நேற்று மதியம் வரை கடுமையாக தாக்கிய வெயில் மதியம் 3.00 மணியளவில் சற்று குறைந்தது. பின்னர் திடீரென மேகமூட்டத்துடன் மாறிய வானம் மாலை சுமார் 4 மணியளவில் திடீரென மழை பெய்யத் துவங்கியது. இடி, மின்னல், காற்று இல்லாமல் அமைதியாக சுமார் இரண்டரை மணி நேரம் இடைவிடாமல் மழைகொட்டியது. பலத்த மழையின் காரணமாக சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மதுரை ரோட்டில் தண்ணீர் போக இடமின்றி ரோட்டில் தேங்கி நின்றது. இதனால் வாகனங்கள் தண்ணீரில் ஊர்ந்தபடி சென்றன. குடிநீர் தட்டுப்பாடு, வெயிலின் தாக்கம் உள்ள இந்நேரத்தில் இம்மழை பொதுமக்களுக்கு சற்று ஆறுதலையும், மகிழ்ச்சியையும் அளித்துள்ளது.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் பழ மரக்கன்றுகள் தோட்டக்கலைத்துறை அறிவிப்பு**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பழமரக்கன்று, காய்கறிகள் வீரிய ஒட்டு ரக நாற்றுகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது இதுகுறித்து தோட்டக்கலைத்துறை சார்பில் விடுத்துள்ள அறிக்கை: ‘‘சிவகங்கை மாவட்டத்தில் காய்கறி, பழமரக்கன்று சாகுபடி பரப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தேசிய

தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் ரூ.2 கோடியே 64 லட்சம் விவசாயிகளுக்கு மானியம் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மா ஒட்டுச்செடி, கொய்யா பதியன், முந்திரி ஒட்டுச்செடி, பப்பாளி வீரிய ரக நாற்றுகள் வழங்கப்பட உள்ளது. மா அடர் நடவு முறையில் 100 எக்டேர், உயர் அடர் நடவு முறையில் 5 எக்டேர், கொய்யா 50 எக்டேர், முந்திரி, பப்பாளி தலா 100 எக்டேர் பரப்பளவில் பதியன் செய்ய நாற்றுகள் விநியோகிக்கப்பட உள்ளது. உதிரி மலர் சாகுபடியில் மல்லிகை நாற்றுகள் 100 எக்டேர் பரப்பளவில் நடவு செய்ய வழங்கப்பட உள்ளது. மேலும் பசுமை குடில், நிழல் வலைக்கூடம், வெங்காயம் சேமிப்பு கிடங்கு, தேனி வளர்ப்பு பெட்டி, தேன் எடுக்கும் பெட்டி உள்ளிட்டவைகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது. 58 எக்டேர் கத்திரி, 227 எக்டேர் மிளகாய், 35 எக்டேர் பரப்பளவில் தக்காளி நாற்றுகளும் நடவு செய்ய மானியத்தில் வழங்கப்பட உள்ளன. இவைகளை பெற விரும்பும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் மூதுரிமை பதிவேட்டில் முன் பதிவு செய்யவேண்டும். இவ்வாறுஅதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நீர்மேலாண்மை பயிற்சி முகாம்**

தூத்துக்குடி, : தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் நீர் மேலாண்மை பயிற்சி முகாம் நடந்தது.நீர்நிலைகள் பல்வேறு மாசுபாடுகளால் பாதிக்கப்பட்டு, குடிநீர், நன்னீர் அரிதாக வரும் அபாயத்தை கருத்தில் கொண்டு சமுதாய விழிப்புணர்ச்சியோடு நீர் ஆதாரங்களை பாதுகாக்கும் முயற்சியில் தூத்துக்குடி காமராஜ் கல்லூரி வேதியியல் துறை பேராசிரியை முனைவர் வான்மதி, புதுடெல்லி மத்தியஅறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் ரூ.9.5 லட்சம் நிதிஉதவியோடு ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

அதில் ஒருபகுதியாக நாட்டுநலப்பணித்திட்ட கல்லூரி மாணவ, மாணவியருக்கு நீர்வள பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்த பயிற்சி மற்றும் வழிமுறைப்படுத்தும் கருத்தரங்கு காமராஜ் கல்லூரியில் நடைபெறுகிறது. சுமார் 100 மாணவ, மாணவியர்கள் இம்முகாமில் பயிற்சி பெறவுள்ளனர்.

**சீமை கருவேல மரங்களை அகற்ற கெடு**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை நகரில் உள்ள சீமைகருவேல மரங்களை இன்னும் 30 நாட்களுக்குள் வேரோடு அகற்ற வேண்டும் என்று நகராட்சி ஆணையர் (பொ) சுப்பிரமணியன் அறிவுறுத்தியுள்ளார். சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவுபடி, சீமை கருவேல மரங்களை புதுக்கோட்டை நகரத்தில் வளர்க்கவும், பராமரிக்கவும் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நீர்நிலைகள் மற்றும் பொது இடங்களில் முளைத்துள்ள சீமை கருவேல மரங்கள் நகராட்சி சார்பில் வேரோடு அகற்றப்படுகின்றன. பொதுமக்கள், தங்களுக்கு சொந்தமான இடங்களில் முளைத்துள்ள சீமை கருவேல மரங்களை இன்னும் 30 நாட்களுக்குள் வேரோடு அகற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், அவை நகராட்சி சார்பில் அகற்றப்படுவதோடு அதற்கான செலவினம் வசூலிக்கப்படும். மேலும் மரங்கள் பகிரங்க ஏலம் விடப்பட்டு செலவினங்கள் ஈடுபட்டப்படும் என நகராட்சி ஆணையர் (பொ) சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**320 ஏக்கர் நெற்பயிர்கள் கருகியதால் மாற்று ஏற்பாடு செய்து பொருளாதார நெருக்கடியிலிருந்து காப்பாற்ற வேண்டும் குறைகேட்பு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

மன்னார்குடி, : மன்னார்குடியில் நடந்த விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் தலையாமங்கலம் வருவாய்கிராமத்தில் 320 ஏக்கர் நெற்பயிர்கள் கருகியதால் மாற்று ஏற்பாடு செய்து பொருளாதார நெருக்கடியிலிருந்து விவசாயிகளை காப்பாற்ற வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஆர்டிஓ அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

நடைபெற்றது. ஆர்டிஓ செல்வசுரபி தலைமை வகித்தார். மன்னார்குடி கோட்டத்திற்கு உட்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், எடமேலையூர் கோதண்டராமன் பேசும்போது, தமிழக அரசு கடந்த ஆண்டு நெல்லுக்கு நிகழ்வு செலவு என்ற தலைப்பில் குவிண்டாலுக்கு ரூ.50 வழங்கியது. தற்போது ஊக்கத்தொகை என்று குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 70 மற்றும் ரூ. 50 என தரத்திற்கு ஏற்ப அறிவித்துள்ளனர் கடந்தாண்டு வழங்கப்பட்ட நிகழ்வு செலவுத்தாகையை நிறுத்தாமல் இந்தாண்டு ஊக்கத்தொகையுடன் சேர்த்து வழங்க வேண்டும் என்றார்.

தமிழக காவிரி விவசாயிகள் சங்க பொதுச் செயலாளர் பிஆர்.பாண்டியன் பேசும்போது, பொதுப்பணித்துறை அதிகாரிகளை சென்னையை சேர்ந்த ஒப்பந்தகாரர்கள் சிலர் மிரட்டி திருவாரூர் மாவட்டத்தில் தாங்கள் எடுத்துள்ள தூர்வாருவதற்கான ஒப்பந்த பணிகளை செய்யாமல் வேலை பார்த்ததுபோல பில் கேட்டு மிரட்டியுள்ளனர். ஆனால் பணிகள் நடைபெறாமல் பணம் தர முடியாது என அதிகாரிகள் மறுத்து வருகின்றனர். எனவே அதிகாரிகள் எந்தெந்த பணிகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதில் எந்த பணிகள் முடிக்கப்பட்டுள்ளது என்ற பட்டியலை உடனடியாக வெளியிட வேண்டும். இதுவரை முடிக்கப்படாத பணிகளை வரும் ஜனவரி மாதத்தில் செய்து முடித்து கொடுக்க வேண்டும் என்றார். விவசாயி பன்னீர் செல்வம் பேசும்போது, தலையாமங்கலம் வருவாய் கிராமத்தில் உள்ள தலையாமங்கலம் பொன்னமங்கலம், குறிச்சி கிராமம் உள்ளிட்ட பகுதிகளில் 320 ஏக்கர் பரப்பில் நேரடி தெளிப்பு வயல்களில் தெளித்த பயிர்கள் அனைத்தும் கருகி விட்டன. தற்போது பெய்து வரும் மழைகூட பயனில்லாத வகையில் உள்ளது. எனவே அதிகாரிகள் பார்வையிட்டு வேளாண்மை துறை மூலம் அதற்கு மாற்று ஏற்பாடு செய்து அப்பகுதி விவசாயிகளை பொருளாதார நெருக்கடியிலிருந்து காக்க வேண்டும் என்றார்.

காரியமங்கலம் கண்ணன் பேசும்போது, கடந்த 2008 நிஷா புயலுக்கு பிறகு திருவாரூர் மாவட்ட விவசாயம் கடுமையாக இயற்கை சீற்றத்தில் பாதித்து வருகிறது. கடந்த ஆண்டு ஒரு பவுனுக்கு ரூ.18,500 கடன் தந்த வங்கிகள் தற்போது ரூ. 11 ஆயிரம் அளவில் தருகின்றன. வங்கிகளில் மற்ற கடனையும் வழங்காத நிலையில் எனது சாகுபடி செலவை எப்படி எதிர்கொள்வது, எனவே கடன் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்றார். மன்னார்குடி ரகுபதி பேசும்போது, வனத்துறை மூலம் வழங்கப்பட்ட மரக்கன்றுகள் ஒன்றுக்கு அதனை நட்டு கொடுப்பதற்கான செலவு ரூ.19 என்ற அளவில் கணக்கிட்டு திருவாரூர் மாவட்டத்தில் சுமார் 86 லட்சம் வந்துள்ள நிதி உரிய விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. அதில் முறைகேடு நடந்துள்ளது, அதுகுறித்து விசாரிக்க வேண்டும் என்றார். கூட்டத்தில், தற்போது அறுவடை நெல்லை கொள்முதல் செய்வதில் நுகர்பொருளர் வாணிபக்கழகம் பல்வேறு குளறுபடிகளை செய்து வருகிறது என குற்றஞ்சாட்டிய விவசாயிகன் ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 21 சதவீதமாக தளர்த்திட வேண்டும் என வலியுறுத்தினர். கூட்டத்தில், விவசாயிகள் முத்துப்பேட்டை எம்ஜிஆர், திருவாரூர் சத்தியநாராயணா, நீடாமங்கலம் மாரியப்பன், ராதா நரசிம்மபுரம் வேதரத்தினம் உள்பட விவசாயிகள் தங்களது பகுதி கோரிக்கைகளை முன்வைத்து பேசினர்.

**தோட்டக்கலை பயிற்சி**

தேனி, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலையமான பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரியில் பயிலும் மாணவியர் ஆதித்யா, அனுப்பிரியா ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் தேனி அரு கே உப்பார்பட்டி கிராமத்தில் விவசாயிகளுடன் தங்கி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர். இதில், விவசாயிகள் கெங்கைராஜன், சிவராஜ் ஆகியோர் தலைமையில்

மாணவியர் ஆதித்யா, அனுப்பிரியா ஆகியோர் மண்புழு உரம் தயாரிப்பு முறை மற்றும நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு கூட்டத்தை நடத்தினர்.

**சொட்டு நீர்பாசன கரும்பு விவசாயிகளுக்கு நிதிக்கல்வி பயிற்சி**

தேனி, : தமிழகத்திலேயே முதன்முறையாக சொட்டுநீர் பாசன கரும்பு விவசாயிகளுக்கு நிதிக்கல்வி பயிற்சி முகாம் தேனியில் நேற்று நடந்தது. வைகை அணை ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையுடன் சாலிசாரிடாட் தொண்டு நிறுவனம் மற்றும் தேசிய திறன் மேம்பாட்டு குழுமம் இணைந்து இந்திய கரும்பு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கும் ஆதரவு திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசன கரும்பு விவசாயிகளுக்கான நிதிக் கல்வி பயிற்சி முகாம் தேனியில் நடந்தது. விழாவில் கலந்து கொண்டவர்களை ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை மேலாளர் ராஜேந்திரன் வரவேற்றார்.

சர்க்கரை ஆலை கரும்பு விரிவாக்க முதுநிலை இணை பொதுமேலாளர் கதிரவன் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். சர்க்கரை ஆலை பொதுமேலாளர் சதாசிவம் பேசும்போது, 'இத்திட்டத்தின் மூலம் ஆயிரம் விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன நிதிக்கல்வி அறிவு பயிற்சி 1 மாதத்திற்கும் மேலாக நடக்க உள்ளது. மேலும், இதன்மூலம் விவசாயிகள் தங்கள் வருமானத்தை பெருக்க செயல்திட்ட வழிமுறைகள் கிடைக்கும்' என்றார். இதில் சர்க்கரை ஆலையின் நிதி ஆலோசகர் ராமச்சந்திரன், விவசாயிகளுக்கு நிதிமேம்பாடு, வரவு-செலவு பராமரித்தல், குறுகிய மற்றும் நீண்டகால கடன் பெறுதல், இதன் வட்டிவிகிதாச்சரங்கள் குறித்து பேசினார்.

இப்பயிற்சி முகாமில் தேனி மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்து முன்னோடி கரும்பு விவசாயிகளான சரவணராஜா, சுபாஷ், ராஜா உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட சொட்டு நீர் கரும்பு விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை திறன்மேம்பாட்டு கழக இணை

மேலாளர் அபினாஷ், சர்க்கரை ஆலை நிர்வாக அதிகாரிகள் வெற்றிவேல், செந்தில்குமரன் செய்தனர்.

**பஞ்சாப் மாநிலத்தில் 15 விவசாயிகள் தற்கொலை: பூச்சித் தாக்குதல் காரணமாக பருத்தி செடிகள் அழிந்ததால் விரக்தி**

பஞ்சாப்: லட்சக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த பருத்தி, வெள்ளை பூச்சி தாக்குதலில் அழிந்ததை அடுத்து 15 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பஞ்சாப்பில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பஞ்சாப் மாநிலம் மால்வா மண்டலத்தில் சுமார் 12 லட்சம் ஏக்கரில் பீபி ரக பருத்தி பயிரிடப்பட்டிருந்தது. பூச்சி தாக்குதலை எதிர்த்து வளரும் என கூறப்படும் இந்த பருத்தியை வெள்ளை பூச்சிகளை தாக்கியது சுமார் 12 லட்சம் ஏக்கரில் பயிர்கள் அழிந்துவிட்டதால் 15 விவசாயிகள் தற்கொலை முடிவை எடுத்துவிட்டனர். ரூ.4,200 கோடி அளவிற்கு பயிரிழப்பை ஏற்பட்டுள்ள நிலையில், பாஜக கூட்டணி அரசு ரூ.640 கோடி மட்டுமே நிவாரண நிதியாக அளித்துள்ளது. யானைப் பசிக்கு இது சோளப்பொறி என இதை ஏற்க மறுத்துள்ள ஆயரக்கணக்கான விவசாயிகள் சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் நடத்தி வருகின்றனர். ஏக்கர் ஒன்றிற்கு சுமார் ரூ.3,500 செலவில் பல முறை இந்த மருந்தை அடித்தும் வெள்ளைப் பூச்சிகள் சாகவில்லை என அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். அதே சமயம் இயற்கை பூச்சிக்கொள்ளி மருந்து அடிக்கப்பட்ட பருத்தி பயிர்கள் எந்த பாதிப்பும் இன்றி நல்ல விளைச்சலை கொடுத்துள்ளன. இதனிடையே வெள்ளைப் பூச்சியை கட்டுப்படுத்த மாநில அரசு அங்கீகாரத்துடன் விற்கப்பட்ட ராசாயண பூச்சி மருந்துகள் போலியானவை என இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.